Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :200 ஆனி 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 16 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா 1,902 குணமடைவு 1,342

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி கொரோனா தொற்றிய வர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 902 ஆக அதிக 15

## மூளாயில் நேற்றுத் திடீர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

மூளாய் கிராம அலுவலர் பிரிவில் நேற்று அதிகாலை படையினரால் சுற்றுவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் கிராம அலுவவர் பிரிவில் உள்ள வேரம் என்ற கிராமமே படையி 15

### தமிழர் தாயகத்தை சிதைக்க

# கோத்தா கங்கணம்: மாவை கண்டனம்!



கொழும்பு, ஜூன் 16

வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயக பூமி. தமிழர்களின் எத்தனையோ உயிர்த் தியாகங்கள் நிறைந்த இந்தப் புனித பூமியைச் சிதைக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசும், சிங்களக் கடும்போக்காளர்களும் கங்கணம் கட்டிச் செயற்பட ஆரம்பித்துள்ளார்கள். அதற்கு நாம் ஒருபோதும் அனுமதியோம். இது தொடர்பில் எமது பலத்த எதிர்ப்பை ஜனாதிபதியிடம் தெரிவிக்கவுள்ளோம். அதேவேளை, சர்வதேசத்திடமும் முறையிடவுள்ளோம். 15

## சிறுமி மீது கத்திக் குத்து

சாவகச்சேரி, ஜூன் 16

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழியில் 12 வயதுச் சிறுமி ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாவற்குழி, 300 வீட்டுத்திட்டம் பகுதியைச் சேர்ந்த துவாரகா (வயது-12) என்ற சிறுமியே கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார்.

அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீடொன்றில் நிகழ்வொன்று நடந்துள்ளது. நிகழ்வில் கலந்துகொண்ட உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு மோதலாக மாறி ஒருவரை ஒருவர் கத்தியால் தாக்க முனைந்தபோது, அங்கிருந்த சிறுமி கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின் 15

## துருப்பிடித்த துப்பாக்கி நுணாவிலில் மீட்பு

கொடிகாமம், ஜூன் 16

சாவகச்சேரி, நுணாவிலில் துப்பாக்கி ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. அந்தத் துப்பாக்கி துருப்பிடித்து உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நுணாவில் சேர்ச் வீதியில் உள்ள சித்தி விநாய 15

## தேர்தல் ஆணைக்குழு இன்று முக்கிய பேச்சு

கொழும்பு, ஜூன் 16

தேர்தல்கள் ஆணைக் குழு அதிகாரிகளுக்கு இடையே இன்று முக்கிய கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பொதுத் 15

## கைப்பற்றப்பட்ட வாகனங்களை ஒப்படைக்க பணிப்பு

கொழும்பு, ஜூன் 16

கொரோனாத் தொற்றை அடுத்து நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின்போது அதை மீறி நடந்தமைக்காகக் கைது செய்யப்பட்டவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களைத் திருப்பிக் கையளிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட் 15

## மைத்திரிக்கு "செக்"

### இடைநடுவில் நிகழ்வை நிறுத்தி வெளியேறினார்

கொழும்பு, ஜூன் 16

பொலனறுவையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பங்கேற்றமுன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, தேர்தல் அதிகாரிகளின் தலையீட்டால் இடைநடுவில் திரும்பிச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் நிகழ்வும் இடைநிறுத்தப்பட்டது.

பொலனறுவை மாவட்டத்திலிருந்து பல் 15

## வடக்கு முன்னாள் பிரதம செயலர் ரங்கராஜா நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், ஜூன் 16

வடக்கு மாகாண பிரதம செயலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற சி.ரங்கராஜா நேற்றுத் தனது 71 ஆவது வயதில் கொழும்பு, ஹொட்டகேனாவில் காலமானார்.

யாழ். பொன்னாலையைச் சேர்ந்த இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்சி பட்டத்தை பெற்று, 1978 இல் சம்மாந்துறை, அட் 15

## ஏ.எல். பரீட்சை திகதி மாற்றம் இன்னமும் முடிவாகவில்லை!

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

உயர்தர பரீட்சையை ஒத்திவைப்பது தொடர்பில் இதுவரையில் எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சையை ஒத்திவைக்குமாறு சில தரப்பினர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக உயர்தர பரீட்சை மற்றும் 5 ஆம் தர புல 15

## கொரோனா 2ஆம் அலை வடக்கில் வெகுவிரைவில்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அபாயச் சங்கு

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை வெகு விரைவில் ஏற்படக்கூடும். இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக வடக்கு மாகாணத்துக்கு வரும் இந்தியர்களின் மூலம் இந்த நிலை ஏற்படலாம் என்று அரச மருத்து அதிகாரிகள் சங்கத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலர் மருத்துவர் நவீன் டி சொய்ஸா தெரிவித்ததா 15

## குற்றங்களுடன் தொடர்புடைய 26 பேர் பொலிஸாரின் பிடியில்!

### பிறந்தநாள் கொண்டாடியபோது யாழில் வளைத்துப் பிடித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 16

பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய ஒருவரின் பிறந்தநாளைக் கொண்டாடிய 26 பேர் யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட் 15

## கடலட்டை பிடிப்புக்கு எதிராகப் போராட்டம்

வடமராட்சி, ஜூன் 16

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்கள் அத்துமீறி கடல் அட்டை பிடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து 15

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

011 200 88 88

செலான் வங்கி

# மைத்திரிக்கு "பொக்ஸ்" அடிக்கிறது மகிந்த அணி

கொழும்பு, ஜூன் 16

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைத்திருந்தாலும் அரசியல் ரீதியிலான போட்டியில் தனித்தே செயற்படும். நல்லாட்சி அரசின் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக் கூறவேண்டும்.**

இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசில் முக்கிய பங்கு வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இணைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் அரசியல் ரீதியில் பயணிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் ஒரு கூட்டணிக் கட்சியாக இணைந்துள்ளதே தவிர முக்கிய பங்காளி ஒன்றுமல்ல, நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 'தாமரை மொட்டு' சின்னத்தில் போட்டியிடுவதற்கு இதுவும் ஒரு பிரதான காரணியாகும்.

மக்களே சிறந்த தீர்மானத்தை எடுப்பார்கள். நல்லாட்சி அரசில் இடம்பெற்ற முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு ஜனாதிபதி என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்துகொண்டுள்ளதால் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபட்டதாகக் கருத முடியாது. அவர்களுடன் கூட்டணியமைத்துள்ளோம். எனினும், அவர்கள் தனித்துப் போட்டியிடுகின்றார்கள் என்றே நினைக்க வேண்டும். அவர்களை மக்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்ய வேண்டுமா, வேண்டாமா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றார்.

(எ-22)

# முல்லைத்தீவில் தேர்தல் ஒத்திகை

ஒட்டுசுட்டான், ஜூன் 16

வன்னித் தேர்தல் தொகுதிக்கான மாதிரி வாக்களிப்பு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெற்ற வாக்களிப்பு நடவடிக்கையின்போது வாக்களிப்பு நிலையம் தொற்று நீக்கப்பட்டது. சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வாக்காளர்கள் கைகளும் தொற்று நீக்கப்பட்டு வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்களுக்கும் வாக்காளர்களுக்கும் இடையே இடைவெளி மற்றும் சுகாதார பாதுகாப்பு பின்பற்றப்பட்டு வாக்களிப்புக்கள் நடைபெற்றன.

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் க.விமலநாதன், தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாயளர் நாயகம் சமன்சிறீ ரத்நாயக்க, மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் க.காண்டீபன் ஆகியோர் வாக்களிப்பை கண்காணித்தனர்.

வன்னித் தேர்தல் தொகுதியில் உள்ள மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு தேர்தலில் மக்கள் வாக்களிப்பு குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன்சிறீ ரத்நாயக்கவால் எடுத்துரைக்கப்பட்டது.

காலை 10 மணியிலிருந்து 12 மணி வரையில் வாக்களிப்பு நடைபெற்ற நிலையில், 124 பேரே குறிப்பிட்ட நேரத்துக்குள் வாக்களித்துள்ளனர். கிழமை நாள் என்பதால் வாக்களிப்பு வீதம் குறைவாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ.5,19)

# புதையல் அகழ்வு அறுவர் கைது

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேசாலை யூட்ஸ் வீதி பற்றைக்காட்டில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனரென்ற குற்றச்சாட்டில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். புதையல் எடுக்கப் பயன்படுத்திய நவீன கருவி ஒன்றும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை. இரவு 9மணியளவில் குறித்த பகுதி யில் சந்தேகத்துக்கிடமாக புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனரென்று பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 4 பேரும் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா மற்றும் வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த ஒவ்வொருவருமே கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மன்னார் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (கு-56)

# மருத்துவபீட இறுதியாண்டு பரீட்சைகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவர்களின் எழுத்துப் பரீட்சைகள் நேற்றுக் காலை ஆரம்பமாகியுள்ளன. தொடர்ந்து 5 தினங்கள் பரீட்சைகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஆரம்பமாகியுள்ள பரீட்சையில் சகல மாணவர்களும் தோற்றுவதாக, மருத்துவபீட பீடாதிபதி எஸ்.ரவிராஜ் தெரிவித்தார்.

இலங்கையில் 8 பல்கலைக்கழகங்களில் மருத்துவபீடங்கள் உள்ள நிலையில் 4 பல்கலைக்கழகங்களில் இறுதி ஆண்டு மாணவர்களின் பரீட்சைகள் கொரோனாத் தாக்கத்துக்கு முன்பே முடிவுற்றிருந்தன. யாழ்ப்பாணம் உள்ளிட்ட நான்கு பல்கலைக் கழகங்களில் பரீட்சைகள் இடம்பெறவில்லை. மருத்துவபீட மாணவர்களின் இறுதி ஆண்டுப் பரீட்சை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுகாதார அமைச்சிடம் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் பரீட்சை நடத்த சுகாதார நடவடிக்கைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி வரை எழுத்து மூலப் பரீட்சைகள் நடைபெறும். அதன் பின்னர் 22ஆம், 23ஆம் திகதிகளில் செயன்முறைப் பரீட்சைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,105)

# பிறந்த நாள் கொண்டாடிய 8 பேர் நாவற்குழியில் கைது

சாவகச்சேரி, ஜூன் 16

சுகாதார நடைமுறைகளை மீறி பிறந்தநாள் விழா கொண்டாடிய 8 பேர் நாவற்குழியில் கைது செய்யப்பட்டனர். அவர்களைச் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

இவர்களைக் கைது செய்த சாவகச்சேரிப் பொலிஸார், சுகாதார நடைமுறைகளை மீறிச் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் சமூகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அறிவுறுத்தல்களை மீறி ஒன்றுகூடியமை தண்டைக்குரிய குற்றமாகும். இவ்வாறான தவறுகள் இனிமேல் நடக்கக் கூடாது என்று எச்சரித்து, அவர்களைச் சொந்தப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

(எ-9)

# ஊரெழு வடக்கில் வீடு மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு வடக்கில் வீடொன்றின் மீது நேற்றுமாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் வீட்டின் முன்பகுதி சிறிது சேதடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் வீட்டின் முன் சுவர் சேதமடைந்தது. வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-26)

# ஒன்றுகூடிய 24 பேர் பொலிஸால் கைது!

கிளிநொச்சி, ஜூன் 16

தனிநபர் இடைவெளியைப் பேணாத குற்றச்சாட்டில் கிளிநொச்சி அக்கராயன்குளத்தில் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளர். அவர்களில் 14 பேரை எதிர்வரும் 24ஆம் திகதிவரையும், ஏனைய 10 பேரை எதிர்வரும் 29ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக ஒன்றுகூடுகின்றமை தொடர்பாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் பொலிஸார் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர். அதில் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 24 பேர் கைது செய்யப்பட்டனர்.

தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று உள்ள நிலையில் தனிநபர் இடைவெளியையும், சுகாதார நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமை, சட்டவிரோதமாக ஒன்றுகூடியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சி நீதிவான் ரி.சரவணராஜா அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ-35)

# ஐ.தே.கவின் வேட்பாளர்கள் ஆரோக்கியமான கலவையே!

## இப்படிக் கூறுகின்றார் ரணில் விக்கிரமசிங்க

**கொழும்பு, ஜூன் 16**

**2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கான வேட்பாளர்களாக கட்சி ஏராளமான புதிய முகங்களை களமிறங்கியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் தொழில் வல்லுநர்கள், இளைஞர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் உள்ளடங்கிய ஆரோக்கியமான கலவை. அவர்கள் அனைவரும் நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள்.**



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் மாவட்ட முகாமையாளர்களுடனான சந்திப்பு கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமது கட்சி நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்த்தது மட்டுமல்லாமல் அவர்களின் தேவைகளுக்கு ஏற்பவும் செயற்பட்டு வருகின்றது.

“225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தூக்கி எறிய விரும்புகின்றோம் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே இந்தத் தேர்தலில் ஐ.தே.க.தான் அதிக எண்ணிக்கையிலான புதிய வேட்பாளர்களைக் கொண்ட கட்சியாக காணப்படுகின்றது. எனவே புதியவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்கியுள்ளோம்.

### ஜனாதிபதி மீதான நம்பிக்கை இழப்பு

ஜனாதிபதி கோத்தாபய மீது பொது மக்கள் ஏற்கனவே நம்பிக்கை இழந்துவிட்டனர். அவருடைய தரப்பினர் மீதான நம்பிக்கையும் தற்போது மக்களுக்கு இல்லாது போய்விட்டது.

நாட்டின் மிக நீண்டகால அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி மற்றும் தோல்வி என இரண்டையும் சந்தித்துள்ளது. மேலும் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப கட்சியை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை நாம் புரிந்துகொண்டுள்ளோம்.

தற்போது, நாடு பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. அவற்றுக்கு தீர்வுகாணும் ஒரே அரசியல் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே.

குறிப்பாக பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் அதேவேளை, அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளை நாம் முன்வைப்போம்” - என்றார். (த)

---

# சட்டவிரோத நிதி நிறுவனங்களை உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்

*மத்திய வங்கியும் இதைச் செய்யலாம் என்று வடக்கு முன்னாள் ஆளுநர் கூறுகின்றார்*

கொழும்பு, ஜூன் 16

நாடு முழுவதும் இயங்கும், சட்டபூர்வமற்ற குத்தகை நிறுவனங்களை தடைசெய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய வங்கிக்கும் இந்த அதிகாரம் உள்ளது என்று வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் கேட்டுக்கொண்டார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபையில், 1948 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில், அனைத்து மக்களுக்கும் வாழும் உரிமை உறுதி செய்யப்பட்டது.

ஆனால், இன்று இந்த உரிமை கேள்விக்குறியாகியுள்ளது. இதனை அகில இலங்கை முச்சக்கரவண்டி சேவையாளர் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தனவின் படுகொலை வெளிச்சம் போட்டுக் காண்பித்துள்ளது.

மத்திய வங்கி தனது வேலையை சரியாகத்தான் செய்கிறதா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.

பொலிஸ், நீதிமன்றங்கள் என அனைத்தும் செயலிழந்துள்ளன. இன்று நாட்டில் பாதாளக் குழுவினரின் நடமாட்டம் தான் அதிகரித்துள்ளது. இதுதான் நாட்டில் நடக்கிறது. மக்களின் உரிமையை மீறி எவராலும் அரசியல் மேற்கொள்ள முடியாது. நான் வடக்கின் ஆளுநராக இருக்கும்போது, 63 குத்தகை நிறுவனங்களைத் தடை செய்திருந்தேன்.

போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், இளைஞர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இந்த குத்தகை நிறுவனங்களால், நூற்றுக்கு 60 வீத அதிக வட்டிக்கு கடன் கொடுக்கப்பட்டது. இதனால், மக்களின் வாழ்க்கையே பாதிக்கப்பட்டது. இதனால், நான் மத்திய வங்கி ஆளுநருடன் அப்போது கலந்துரையாடி இந்த நிறுவனங்களைத் தடை செய்தேன். இவ்வாறு இப்போதும் மேற்கொள்ள முடியும். சட்டரீதியற்ற ஒரு குத்தகை நிறுவனத்தை தடை செய்யும் அதிகாரம் மத்திய வங்கிக்கு உள்ளது. எனவே, இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆளும் தரப்பு உறுப்பினர்களின் அழுத்தம் இதில் விடுக்கப்பட வேண்டும்.

இது அவசியமான ஒன்றாக இருக்கிறது. ஒரு நாட்டுக்குள் ஒரு சட்டம் தான் நடைமுறையில் இருக்க முடியும் - என்று தெரிவித்துள்ளார். (த)

---



யாழ்ப்பாணம் சங்கிலிய மன்னன் நினைவுநாள் குழுவினர் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கடந்த சனிக்கிழமை சங்கிலிய மன்னனின் 401 ஆவது சிரார்த்த கிரியையில் ஈடுபட்டனர். (க)

---

# ஜஸ்மின் சூக்காவுக்கு எதிராக மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலி

*சட்ட நடவடிக்கை எடுக்கிறாராம்*

கொழும்பு, ஜூன் 16

இலங்கையின் தேசிய புலனாய்வுப்பிரிவின் இயக்குநர் மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலி சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் இயக்குநர் ஜஸ்மின் சூக்காவுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்று தகவல்வெளியாகியுள்ளது.

மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலி, தனது சட்டத்தரணி ஊடாக இந்தவிடயம் தொடர்பாக ஜஸ்மின் சூக்காவுக்கும் அவருடைய அமைப்புக்கும் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதம் தொடர்பாக புலனாய்வு அதிகாரியின் சட்டத்தரணி பசன் வீரசிங்க தெரிவித்துள்ளதாவது:

மேஜர் ஜெனரல் சாலிக்கு எதிராக பல்வேறு அவதூறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளீர்கள்.

அவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள அவதூறு குற்றச்சாட்டுகள் காரணமாக உள்நோக்கம் கொண்ட சக்திகள் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிக்கு ஆபத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சாலியின் குணாதிசயங்கள் மற்றும் அவருடைய திறமையான செயற்பாடுகளுக்காகவே அவருக்கு பல்வேறு விருதுகள் கிடைக்கப்பெற்றன.

எனினும், சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் இலங்கை குறித்த இணையத்தளம் மூலமாக ஜஸ்மின் சூக்கா வெளியிட்ட அறிக்கையால், புலனாய்வு அதிகாரியின் குணாதிசயத்துக்கும் கௌரவத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அகவே, ஜஸ்மின் சூக்கா எதிர்காலத்தில் அவதூறு கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்கவேண்டும். இதனை ஏற்றுக் கொள்ளாவிடின் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி ஏற்படும். என்று தெரிவித்துள்ளார். (த)

---

# மஹிந்த மீது சாய்ந்தது அரச ஊடகம் ஒன்று!

*‘கபே’ அமைப்பு குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 16

கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள அரச ஊடகமொன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பரப்புரைகளை முன்னெடுக்கின்றது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான ‘கபே’ குற்றம் சுமத்தியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் ‘கபே’ இதனைக் குறிப்பிட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் கபே தெரிவித்துள்ளதாவது:

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 50 வருடகால அரசியல் வாழ்க்கை பற்றிய தொடர் நிகழ்ச்சிகளின் மூலம் குறித்த அரச ஊடகம் அவரை ஊக்குவிக்கின்றது.

இது அரச வளங்களை தவறாக பயன்படுத்தும் நடவடிக்கை ஆகும். எனவே இந்தவிடயத்தில் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றும் ‘கபே’ குறிப்பிட்டுள்ளது. (த)

---

*பாடசாலைகள் ஆரம்பித்ததும்*

# 25 மாணவர்களே ஒரு வகுப்பில்!

கொழும்பு, ஜுன் 16

இலங்கையில் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வகுப்பறை ஒன்றில் மாணவர்களின் எண்ணிக்கை 25ஆக மட்டுப்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம்.எம்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளால் வழங்கிய தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கமைய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மாணவர்கள் இணைந்து விளையாட்டுகளில் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீள் அறிவிப்புவரை பெற்றோர் கூட்டங்கள் நடத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஜுலை ஆறாம் திகதியே மாணவர்கள் பாடசாலைக்கு உள்வாங்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



## தென்னையை அரிந்து வீழ்த்திய விஷமிகள்

கொக்குவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் கொக்குவிலில் சொந்தக் காணியில் வீதியோரம் நின்ற தென்னை மரத்தை விஷமிகள் நேற்று அதிகாலை இயந்திர வாளால் அரிந்து வீழ்த்தியுள்ளனர் என்று காணி உரிமையாளர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் பூநாறிமடம் சந்திக்கு அருகே குறுக்கு வீதியிலுள்ள வீட்டின் முன்பாக மாதா சொரூபம் உள்ளது. நேற்றுமுன்தினம் பகல் அந்த வீட்டுக்குள் அத்துமீறிச் சென்ற சிலர், அந்த மாதா சொரூபம் மீது குறித்த வீட்டின் வளவிலுள்ள தென்னை மரத்திலிருந்து தேங்காய் வீழ்கின்றது என்று கூறி தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸாரும் நேரில் சென்று நிலைமையை அவதானித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த வீட்டார் நள்ளிரவு நித்திரைக்குச் சென்றிருந்த வேளை, விஷமிகள் இயந்திர வாள் கொண்டு தென்னை ஒன்றை அரிந்து வீழ்த்தியுள்ளனர். ஆனால் அரிந்து வீழ்த்தப்பட்ட தென்னை, மாதா சொரூபத்துக்கு அருகில் நின்ற மரம் அல்ல. இதுபற்றி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (த-105)

# முல்லை மருதங்குளத்தை மழைக்குமுன் சீரமையுங்கள்!


அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 16

மாரி மழைக்கு முன்னதாக முல்லைத்தீவு, மருதங்குளத்தை சீரமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புத்துவெட்டுவான் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மருதங்குளம் கடந்த கால வெள்ளம் காரணமாக உடைப்பெடுத்தது. அதன் கலிங்குப் பகுதியில் சுமார் அரைவாசி முற்று முழுதாகச் சேதமடைந்திருந்தது. இந்த நிலையில் குறித்த குளத்தில் தண்ணீர் தேக்குவதற்காக கலிங்குக்கு மேலாக அணைக்கட்டு ஒன்று கட்டப்பட்டுள்ளது. இருந்த போதும் அந்த அணைக்கட்டு நிரந்தரமானதல்ல. தண்ணீரை அதிகளவு தேக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.



250 ஏக்கர் வரை விவசாயம் செய்யக் கூடிய நிலை இருக்கின்றபோதும் வழமையாக சிறுபோகம் 125 ஏக்கர் வரையில் செய்கை பண்ணப்பட்டு வந்தது. இந்தமுறை 6 அடி உயரத்துக்கு மாத்திரமே குளத்தில் தண்ணீர் உள்ளது. இவ்வாறு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக 49 ஏக்கரில் மாத்திரமே இந்தமுறை சிறுபோகத்தில் நெற்செய்கை அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறித்த குளத்தின் கலிங்குப் பகுதியை மிக விரைவாகச் சீரமைத்து வருகின்ற மார்கழிக்காவது அதிகளவான தண்ணீரைத் தேக்கினால் தொடர்ச்சியாக எங்களுடைய விவசாய நடவடிக்கைகளை தங்கு தடையின்றி செய்யமுடியும். குறித்த வேலைத் திட்டத்தை இனி வரும் மாரி மழைக்கு முன்பாக நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முயற்சி எடுக்க வேண்டும்-என்றனர். (ப-19)

## வவுனியா – கொழும்பு இடையே குளிரூட்டப்பட்ட பஸ் சேவை

வவுனியா, ஜூன் 16

வவுனியா-கொழும்பு இடையே குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 தாக்கத்தை யடுத்து கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனையடுத்து நாடு முழுவதும் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது.

தற்போது கட்டுப்பாடுகளுடன் போக்குவரத்து இயல்புக்கு திரும்பியுள்ள நிலையில் வவுனியா-கொழும்பு இடையே குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சொகுசு பஸ்ஸில் பயணிப்பவர்கள் உடல்வெப்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அரச அறிவுறுத்தலுக்கு அமைவாகவே சேவைகள் இடம்பெறுகின்றன என்று அதன் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சொகுசு பஸ் சேவை வவுனியாவில் இருந்து தினமும்பிற்பகல் 2.30 மணிக்கும், இரவு 11.30 மணிக்கும் கொழும்பு நோக்கியும், கொழும்பில் இருந்து தினமும் முற்பகல் 11 மணிக்கும், இரவு 9.30 மணிக்கும் வவுனியா நோக்கியும் இடம்பெறும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-110)

## விதிமுறைகளை மீறி சுவரொட்டி ஒட்டினரென கைதானோருக்கு பிணை

தலைமன்னார், ஜூன் 16

நாடாளுமன்றத் தேர்தலில்போட்டியிடும் வேட்பாளருடைய சுவரொட்டிகளை, தேர்தல் விதிமுறைகளை மீறி ஒட்டினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு தலைமன்னார் பியர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களின் சுவரொட்டிகளையே அவர்கள் ஒட்டினர். அவர்களை விடுவிக்குமாறு தலைமன்னார் பொலிஸில் சட்டத்தரணி எஸ். டினேசன் முன்னிலையானார். அதனையடுத்து நால்வரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். எனினும், அவர்களுக்கு எதிராக மன்னார் நீதிவான் மன்றில் பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கின்றனர் என்று தலைமன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (த-60)



குருதிக் கொடையாளர் தினத்தையொட்டி கீரிமலை கூவில் பகுதியில் நேற்றுமுன்தினம் குருதிக் கொடை முகாம் நடைபெற்றது. 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்துடன் இணைந்து கூவில் சிவானந்தா சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகம், மக்கள் ஒன்றியம், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து இதை நடத்தியது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கி மருத்துவர் ம.பிரதீபன் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (த)

## நெருக்கடிக்கு மத்தியிலும் சீரான திண்மக் கழிவகற்றல்

பிரதேச சபைத் தவிசாளர் பெருமிதம்

கொடிகாமம், ஜூன் 16

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சபைச் செயலாளர் உட்பட அலுவலக பணியாளர்களால் திண்மக் கழிவகற்றல் முடிந்தவரை சிறப்பாக செயற்படுத்தப்படுகின்றது என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொடிகாமம் சந்தை இயல்பு நிலைக்குத் திரும்பினாலும்கூட வருமான இழப்பீட்டை எவ்வாறு சீர்செய்வது, இழப்பீட்டை எப்படி வழங்குவது என்பன பற்றி மாகாண ரீதியாக முடிவு எடுப்பது குறித்து ஆராயப்பட்டது.

மின்விளக்குகள் தொடர்பான வேலைகளை இலங்கை மின்சார சபையுடன் சேர்ந்துதான் செய்யவேண்டியுள்ளது.

ஆனால், அவர்களின் ஆதரவைப் பெறுவது சிரமமாக இருக்கிறது. வேலை செய்வதாக இருந்தால் உடனடியாக அறிவித்துவிட்டு கால அவகாசம் தராது வேலைகளைச் செய்யவருகின்றார்கள். இதனால் சிரமம் ஏற்படுகிறது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபை உறுப்பினர் எவருமே பிரதேச சபை வளாகத்துக்குள் அரசியல் செய்யமுடியாது.

காற்றாலை நிறுவனத்தால் 100 வோல்ட் உள்ள 60 மின் விளக்குகள் பொருத்துவதற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். கொள்வனவுசெய்த மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். அதில் எனக்கு உடன்பாடு இல்லை. இருந்தாலும் மக்களுக்கு கிடைப்பதை நாம் தடுக்க முடியாது. அவர்கள் வேண்டுமானால் பிரதேசசபை ஊடாக பொருத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளேன்.

சப்ரிகம வேலைத் திட்டத்தில் தேர்தல் முடியும்வரை அரசியல் சார்பாக எந்த நடவடிக்கைகளையும் செய்யமுடியாது. தொழில்நுட்ப அலுவலர்கள்தான் பார்க்க வேண்டும். வீதி போடுவதில் ஏதாவது பிரச்சினை இருப்பின் சபை உறுப்பினர்கள் எனது கவனத்துக்கு கொண்டு வாருங்கள். நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் முடிந்த பின்னர் அரசியல் ரீதியாக எந்த வேலைகளையும் செய்யலாம். அதற்கு முன்னர் சப்ரிகம திட்டத்தில் தேர்தல் சட்ட விதிகளைப் பின்பற்றுங்கள்- என்றார். (த-159)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கோயில் யானையின் யாசகம்

ஒரு கோயில். அந்தக் கோயிலுக்கு வருபவர்கள் கோயில் யானையிடம் ஆசிர்வாதம் பெறுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். எப்போதும் யானையைச் சுற்றிப் பெருங்கூட்டம் இருக்கும். அந்தக் கோயிலுக்கே யானையால் தான் இத்தனை புகழும் வருமானமும் கிடைப்பதாக அந்தக் கூட்டத்தில் இருப்பவர்கள் ஆச்சரியத்தோடு பேசிக்கொள்வார்கள். இதனைக் கேட்டுவந்த யானைப்பாகனுக்கு மெல்ல மெல்ல மனம் வேறுதிசையில் சிந்திக்கத் தொடங்கியது. " என்னுடைய யானையால் தானே கோயிலுக்கு இவ்வளவு வருமானமும், புகழும். ஆனால் என்னை எவரும் மதிப்பதில்லையே. ஒழுங்காகச் சம்பளம் கூடத்தருவதில்லை" என யோசிக்கத் தலைப்பட்டான். ஒரு கட்டத்தில் " நானும் யானையும் கோயிலைவிட்டுப் போய்விட்டால் எவரும் கோயிலுக்கே வரமாட்டார்கள், எங்களிடம் தான் வரவேண்டும். அதன் பின் எனக்கே இந்தப் பணமும் புகழும் கிடைக்கும் " என்று நினைத்தவன் அதைச் செயற்படுத்தவும் முடிவெடுத்தான்.

ஒருநாள் பாகன் யானையோடு கோயிலை விட்டு வெளியேறி, தனியாக ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டான். ஆனால் அவன் எதிர்பார்த்ததைப் போல கூட்டம் வரவில்லை. கோயிலுக்கு வழக்கம் போல பக்தர்கள் போய்க் கொண்டு இருந்தார்கள். யானை இல்லையென்று எவரும் கோயிலுக்குப் போகாமல் இருக்கவில்லை. யானை இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் கூட்டம் சேர்ந்திருக்கும் தான். அதற்காக யானை இல்லாக் கோயிலை மிதிக்கமாட்டோம் என மக்கள் அடம்பிடிக்கவில்லை. மறுபுறத்தே யானையை எவரும் பார்க்க வராததால் பாகனுக்கு கையில் பணமேயில்லை. கோயிலுக்கும் திரும்பிச் செல்ல முடியாது. அங்கு இன்னொரு யானையைக் கொண்டுவந்துவிட்டார்கள். இதனால் ஒருகட்டத்தில் யானைப்பாகன் , வேறு வழியின்றி வீடு வீடாக யானையைக் கொண்டுசென்று யாசகம் பெறத் தொடங்கினான். ஒரு காலத்தில் கோயில் யானை என்று பெரும் புகழோடு இருந்த யானை, இப்போது யாசக யானை என்று கேலிப்பொருளாக மாறிப்போனது.


இந்த யானைக்கதை யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு மிக நன்றாகவே பொருந்தும். முன்னைய பொழுதுகளில் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் வராது வந்த மாமணி போல வியப்போடு பார்க்கப்பட்ட விக்னேஸ்வரன் இப்போது கேட்பார் சொல்கேட்டு, கேலிக்குரியவராக மாறியிருக்கிறார். கூட்டமைப்பைவிட்டு வெளியே வந்த அடுத்த செக்கனே புதிய கட்சியை விக்னேஸ்வரன் தொடங்கியபோது, பலரும் , குறிப்பாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உட்பட பேராதரவை வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால் நந்தவனத்து ஆண்டியாக தன்னுடைய விம்பத்தை பின்வந்த நாட்களில் தானே போட்டுடைத்தார் விக்னேஸ்வரன். எந்தத் தமிழ்த் தேசிய முன்னணி அவரை தமிழ் மக்களின் தலைவராக மாறும்படி அழைப்பு விடுத்ததோ அதே கட்சியே அவரைத் தூக்கியெறிந்துவிட்டு தன் வழியே போய் விட்டது. அதேபோன்று கூட்டமைப்பில் ஜனநாயகத்தன்மை இல்லை, எல்லா அதிகாரங்களும் ஒரு சிலரிடம் மட்டுமே உண்டு, கொள்கையில் பிடிப்பில்லை எனச் சொன்ன அதே விக்னேஸ்வரன் அதே தவறுகளைத் தானும் செய்யத் தவறவில்லை.

தமிழ் மக்கள் மத்தியில் குறுகிய காலத்துக்குள்ளேயே ஒரு உச்சநிலைக்குச் சென்ற விக்னேஸ்வரன் அதேவேகத்தில் சறுக்கிக் கொண்டிருக்கையில்தான் தேர்தல் வந்து சேர்ந்தது. முதன் முறையாக விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியும் தேர்தல் களத்தில் குதித்துவிட்டது. குதித்த பின்னர் தான் அந்தக் களத்தில் இருக்கும் சிக்கல்கள் அவருக்கு மெல்ல மெல்ல பிடிபடத் தொடங்கியுள்ளது. முக்கியமாக தேர்தல் பரப்புரைகளுக்கு மிகப்பெருந்தொகைப்பணம் தேவை. மக்கள் மத்தியில் முன்னரைப் போல செல்வாக்கும் இல்லை என்பதால், எப்படியும் வீரியமான பிரசாரத்தை முன்னெடுத்தாலே ஓரளவுக்கேனும் வாக்குகளைப் பெறமுடியும். எனவேதான் இப்போது வெட்கத்தை விட்டு, புலம்பெயரிகளிடமும், ஆதரவாளர்களிடமும் தேர்தலுக்காக காசு தாரீர் என்று கையேந்தியிருக்கிறார் விக்னேஸ்வரன். முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவோ, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான தொழில் வாய்ப்பை உறுதி செய்யவோ, அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வழக்குகளைப் போடவோ, இப்படி மக்களிடம் காசுக்காக கையேந்தியிருந்தால் இதையும் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். ஆனால், தன்னுடைய அதிகார வெறியை நீடிக்கச்செய்ய வேண்டும் என்ற உந்துததாலேயே, யாசகநிலைக்குச்சென்றுவிட்டார்விக்னேஸ்வரன். என்ன செய்வது கோயில் யானையைப் போல இருந்தவரை காலம் இப்போது யாசக யானையாக்கி வேடிக்கை பார்க்கிறது. அத்தோடு இதே விக்னேஸ்வரன் புலம்பெயரிகள் எல்லோருமே கழிவறைகளைக் கழுவியே காசு சம்பாதிக்கின்றவர்கள் என்று கீழ்த்தரமாகச் சொல்லியிருந்தார். இப்போது அதே கழிவறை அகற்றிக் கிடைத்த காசினை தேர்தல் யாசகமாக விக்னேஸ்வரன் கேட்கும் நிலை. ''வாழ்க்கை ஒரு வட்டம்'' தான்.

## கொரோனா மருத்துவமனை:
# அக்கராயன் மக்களுக்கு அதிகாரிகள் விளக்கம்

கிளிநொச்சி, ஜூன் 16

அக்கராயன் மருத்துவமனையை கொவிட்– 19 சிகிச்சை நிலையமாக மாற்றும் செயற்றிட்டம் தொடர்பாக மக்களுடனான கலந்துரையாடல் அக்கராயன் மருத்துவமனையில் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.



இந்த மருத்துவமனையை கொவிட் -19 சிகிச்சைக்குரிய மருத்துவமனையாக மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்தவாரம் கிளிநொச்சி மாவட்டச் செயலருக்கு அக்கராயன் பகுதியைச் சேர்ந்த 15 அமைப்புக்களால் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து குறித்த மருத்துவமனை அமைப்பதன் நோக்கம் தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டப்பட்டது. மக்களின் கருத்துகளும் பெறப்பட்டன. "குறித்த மருத்துவமனையை இங்கு அமைக்க வேண்டாம். எங்களுக்கு இந்த மருத்துவமனை தேவை. இங்குள்ள மக்கள் வேறு இடத்துக்குச் சென்று மருந்துகளை பெறவேண்டும். அதற்கு இங்கு அமைக்கப்பட்டுள்ள வீதிகள் சரியான முறையில் இல்லை. தவிர, பல கிலோமீற்றர் தூரம் பயணித்தே சிகிச்சை பெறவேண்டிவரும். அது சாத்தியமில்லை" என்று பல கருத்துக்களையும் மக்கள் முன்வைத்தனர்.

அதற்கு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர், "பேரிடர் வருகின்ற போது மக்களைப் பாதுகாப்பதற்கே இந்த மருத்துவமனை எடுக்கப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் தீர்மானத்துக்கு அமைய எடுக்கப்பட்ட முடிவு. இந்த மருத்துவமனையை எடுப்பதால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்துதரப்படும்" என்று தெரிவித்தனர்.

இத்தகைய மருத்துவமனைகள் இந்த மாவட்டத்தில் மாத்திரமல்ல ஏனைய மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. மக்களாலும் அமைப்புக்களின் தலைவர்களாலும் வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கை மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்-என்று தெரிவித்தனர். (த-6,214)

## 14 வீதிகளைச் சீரமைக்க தலா 10 லட்சம் ஒதுக்கீடு

சாவகச்சேரி, ஜூன் 16

சாவகச்சேரி நகரசபையின் இந்தவருட உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டதன் பிரகாரம் உறுப்பினருக்கு தலா 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 11 வட்டாரங்களிலும் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 14 வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.

சபையின் தொழில்நுட்பக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் எஞ்சியுள்ள மேலதிக நிதியை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மேலும் சில வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன. மீசாலை மேற்கு கனகசுந்தரம் வீதி, சாவகச்சேரி அரசடி வீதி முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை தாமோதரம் பிள்ளை வீதி இரண்டாம் ஒழுங்கை, சப்பச்சிமாவடி குறுக்கு வீதி, சாரதா வீதி முதலாம் ஒழுங்கை, மீசாலை கிழக்குகுஞ்சன்தரவுஒழுங்கை, மடத்தடி கிழக்கு ஒழுங்கை மீள் தாரிடல், சாவகச்சேரி நகரம் கண்டுவில் இரண்டாம் ஒழுங்கை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி முன் வீதி, கோயிற்குடியிருப்பு கச்சாய் வீதி ஐந்தாம் ஒழுங்கை, கச்சாய்வீதி முதலாம் ஒழுங்கை, விநாசித் தம்பிவீதி இணைப்பு ஒழுங்கை, நுணாவில் கல்வயல்வீதி இரண்டாம்ஒழுங்கை, நுணாவில் மேற்கு காளியாமூலை வீதி ஆகிய 14 வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (த-9)

## தனிமைப்படுத்தல் நிறைவு மேலும் 252 பேர் வீடுகளுக்கு

கொழும்பு, ஜூன் 16

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த மேலும் 252 பேர் வீடுகளுக்குத் திரும்பவுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமதுங்க நேற்றுத் தெரிவித்தார்.

புனானை மற்றும் பெல்வெஹெற ஆகிய தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருந்த குழுவினரே இவ்வாறு தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்குத் திரும்பவுள்ளனர். முப்படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள 43 தனிமைப்படுத்தல் மையங்களில் சுமார் 4,387 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## 1097 மாணவருக்கு 'சிப்தொர' சமுர்த்தி

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி மாவட்டத்தில் 'சிப்தொர' சமுர்த்தி புலமைப் பரிசில் 1097 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஆரணி தவபாலன் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு அபிவிருத்தி பிரிவால் நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தி 'சிப்தொர' புலமைப்பரிசில் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 1097 பேருக்கு இதுவரை புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி முத்திரை பெறுகின்ற குடும்பங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்று உயர் தரம் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 2017 தொடக்கம் 2019 வரை 204 மாணவர்களுக்கும் 2018 தொடக்கம் 2020 வரை 232 மாணவர்களுக்கும் 2019 தொடக்கம் 2021 வரை 661 மாணவர்களுக்கும் என மாவட்டத்தில் 1097 பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஆரணி தவபாலன் தெரிவித்துள்ளார். (த-6)

# விக்னேஸ்வரன் பணம் கேட்டு மரியாதை கெடவேண்டாம்

## கூட்டணியுடன் இணையுமாறு அழைக்கிறார் சங்கரி



**யாழ்ப்பாணம், ஜூன் 16**
**முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடம் பணம் கேட்டு கையேந்தி மரியாதை கெடுவதை விடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து கொள்ளுமாறு அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளார்.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியின் 87ஆவது பிறந்த தினமும் கட்சியின் இணையத்தளம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் நேற்றுக் காலை, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடம் பணம் கேட்டு மரியாதை கெடுவதை விடுத்து எனது கட்சியில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன். எமது கட்சியுடன் இணைந்தால் தலைவர் பதவியை வழங்க நாம் தயாராகவே இருக்கின்றோம். எங்கள் கட்சிக்கு இதுவரை யாரும் நிதி உதவி செய்யவில்லை. யாராவது நிதியுதவி தந்திருந்தால் அதை எங்களுக்குப் பகிரங்கப்படுத்துங்கள். எந்தக் கட்சிக்கும் தற்போது நிதி உதவி தேவைப்படுகின்றது. அதைவிட விக்னேஸ்வரன் அவர்கள் தமது கட்சிக்காக நிதிகோரி இருக்கின்றார். நாங்கள் நடத்தப் போவது சாத்வீகப் போராட்டம். எங்களுக்கும் நிதி தேவையாக உள்ளது- என்றார். (ஒ.5.111)

# 200 கடைகள் எரிந்து சாம்பராகின!

கேகாலை, ஜூன் 16
கேகாலை மத்திய வர்த்தக கட்டடத் தொகுதியில் ஏற்பட்ட திடீர் தீப் பரவல் காரணமாக சுமார் 200 கடைகள் தீக்கிரையாகின.

இந்தத் தீ விபத்து நேற்றுமுன்திம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றது. திடீரென தீப் பரவல் ஏற்பட்டமை தொடர்பில் கேகாலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விரைந்து செயற்பட்ட பொலிஸார் தீயணைக்கும் பணிகளை முன்னெடுத்தனர்.

மின் கசிவு காரணமாகவே தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்று கேகாலை பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# பொலிஸ் அதிகாரி சாவு சட்டத்துறை மாணவன் கைது

கொழும்பு, ஜூன் 16
பொலிஸ் அதிகாரி ஒருவர் விபத்தில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, தேசிய மருத்துவமனையில் பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்ற சந்தேக நபரான மருத்துவரைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்ட பொலிஸ் அதிகாரி கொழும்பு சம்புத்வ ஜயந்தி மாவத்தை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சட்டத்துறை மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான சட்டத்துறை மாணவன் போதையில், டிபெண்டரைச் செலுத்திச் சென்றபோதே விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்தே அந்த மாணவன் கைது செய்யப்பட்டார். (ப)

# மனமாற்றம்தான் அவசியமாகின்றது

## சொல்கின்றார் ஸ்ரீரங்கேஸ்வரன்

வடமராட்சி மக்களிடையே மனமாற்றம் ஒன்றே அவசியமாகின்றது. அந்த மாற்றமே அவர்களின் எதிர்காலத்தை வென்றெடுக்கும் சக்தி கொண்டதாக அமையும் என்று ஈழ மக்கள ஜனநாயகக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டம் மற்றும் அதனுடன் கூடிய ஏதுநிலைகளால் அதிகம் ஈர்க்கப்பட்ட பிரதேசமாக வடமராட்சி காணப்படுகின்றது. ஆனாலும் அந்தத் தாக்கங்களிலிருந்து எமது மக்கள் விடுபட்டு தமது எதிர்காலம் தொடர்பிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு முயற்சிக்கின்றனர் - என்றார். (து)

# வீசா நிலையை முறைப்படுத்த இலங்கைத் தூதரகங்கள் உதவி

கொழும்பு, ஜூன் 16
இத்தாலி அரசால் வழங்கப்பட்ட 'சனடோரியா 2020' சிறப்புப் பொது மன்னிப்பின் கீழ், வீசா நிலையை முறைப்படுத்துவதற்காக தூதரக உதவிகளை எதிர்பார்க்கும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தமது கடவுச்சீட்டுக்களுக்கு விண்ணப்பிப்பதனை விரைவுபடுத்துவதற்கு தேவையான கொன்சியூலர் சேவைகளை வழங்குவதற்கு ரோமிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் மிலானிலுள்ள உதவித் தூதரகம் ஆகியன வசதிகளை ஏற்பாடு செய்துள்ளன என்று ரோமின் இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. அந்தத் தூதரகம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொவிட்19 தொற்றுநோயின் தற்போதைய நிச்சயமற்ற நிலைமைகளுக்கு மத்தியில், பல ஆண்டுகளாகத் தொடரும் வலுவான இருதரப்பு உறவுகளின் பின்னணியில், ஒழுங்கற்ற புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இத்தாலியில்தமது வீசா நிலைமையை முறைப்படுத்துவதற்காக விண்ணப்பிப்பதற்கும், தொழில் நோக்கங்களுக்காக சட்டபூர்வமாக தங்குவதற்கு அனுமதிகளைப் பெறுவதற்குமான வழிவகைகளை வழங்கும் 'இத்தாலியை மீளத் தொடங்குதல்' அபிவிருத்தித் திட்டத்தின் முக்கியமான கொள்கைக் கூறுகளில் ஒன்றாக இத்தாலி அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சனடோரியாவினூடாக இத்தாலியிலுள்ள இலங்கைச் சமூக உறுப்பினர்கள் தங்கியிருப்பதை ஒழுங்குபடுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பொது மன்னிப்பின் கீழ் இலங்கையர்களுக்கு வசதிகளை மேற்கொள்வதற்கும் சேவைகளை வழங்குவதற்கும், தூதரகத்துக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்ட 10 வேலை நாள்களுக்குள் விண்ணப்பதாரர்கள் தமது உண்மையான கடவுச் சீட்டுக்களை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கான சிறப்பான கொன்சியூலர் சேவைகளை ரோம் மற்றும் மிலானிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் தொடங்கியுள்ளன- என்றுள்ளது. (ப)

# மைத்திரியுடன் மல்லுக்கட்டுகிறது மஹிந்த அணி

கொழும்பு, ஜூன் 16
தாமரை மொட்டுச் சின்னத்துக்குள் மறைந்து நாடாளுமன்றத்துக்குச் செல்ல முயற்சிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நாங்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றோம். நல்லாட்சியில் இருந்து நாட்டை அழித்தவர்கள் இன்று நல்லவர்கள் போல் இருக்கின்றனர் என சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்குப் பொய் வாக்குறுதிகளை வழங்கி 2015இல் ஆட்சிக்கு வந்த அரசு நாட்டை இழித்திருந்தது. மத்திய வங்கியைக் கொள்ளையடித்தார்கள். ராஜபக்ஷ குடும்பத்தை சிறையிலடைத்தார்கள். தேரர்கள், இராணுவத்தினர், அரச ஊழியர்களைப் பழிவாங்கினார்கள். நாட்டின் பொருளாதாரத்தை இல்லாமல் ஆக்கினார்கள். தோற்கடித்த தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் தலைதூக்க இடமளித்தார்கள். அதன் விளைவாகவே கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வெளிநாடுகளில் தப்பியிருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதலில் இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் இணையத்தளங்கள் குறிவைக்கப்பட்டன. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளை நாட்டிலும் சர்வதேசத்திலும் போஷித்த நல்லாட்சி அரசில் இருந்தவர்கள் இன்று சுற்றவாளிகள் போல் இருக்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் இந்தியப் புலனாய்வுத்துறை தகவல் தெரிவித்திருந்தது. கடந்த அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இதனை அறிந்திருந்தனர்.

பொலிஸ்மா அதிபர்கூட அறிந்திருந்தார். ஆனால், அதனைத் தடுப்பதற்கு அரசின் ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அன்று நாங்கள் தாமரை மொட்டுக் கட்சியை உருவாக்கும்போது எம்மை வீதி எங்கும் அலையவிடுவதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஆனால், அவ்வாறு தெரிவித்த அவர் இம்முறை நாடாளுமன்றத்துக்குச் செல்ல தாமரை மொட்டுச் சின்னத்திலே போட்டியிடுகின்றார்- என்றார். (ப)

# பாகிஸ்தானில் சிக்கிய 129 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு. ஜூன் 16
கொரோனாத் தொற்றால் பாகிஸ்தானில் சிக்கித் தவித்த 129 பேர் விசேட விமானம் மூலம் நாட்டுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை அழைத்து வரப்பட்டனர்.




சிறிலங்கன் எயார் லைன்ஸுக்குச் சொந்தமான, விமானம் மூலம் இவர்கள் கராச்சியிலிருந்து நேற்றுக் காலை 4.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளின் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# ஆர்ப்பாட்டங்களுக்கு தடை விதிக்க முடியாது

## அனில் ஜாசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டால் அவர்களுக்குத் தடைவிதிக்க முடியாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது என்பது ஜனநாயக உரிமை.

முகக்கவசம் அணிவது, சமூக விலகலைப் பின்பற்றுவது போன்ற சுகாதார வழிமுறைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்பற்றுகின்ற பட்சத்தில், அவர்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்.

அத்துடன், தாங்கள் பெருமளவு மக்கள் ஒன்றுகூடுவதை ஊக்குவிக்காத அதேவேளை, ஆர்ப்பாட்டத்துக்காக குறிப்பிட்ட அளவிலானவர்களைப் பயன்படுத்தலாம் - என்றார்.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களை தனிமைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஐ)

# 50 வீதமான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன

கொழும்பு, ஜூன் 16

பொதுத்தேர்தலுக்கான 50 வீதமான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது அரச அச்சகம்.

அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இம்முறை பொதுத்தேர்தலுக்காக ஒரு கோடியே 70 இலட்சம் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படவுள்ளன. இவ்வாறு அச்சிடப்படவுள்ள வாக்குச்சீட்டுகளில் மிகவும் நீளமான வாக்குச்சீட்டு கம்பஹா மாவட்டத்திற்காக அச்சிடப்படவுள்ளது. அகலமான வாக்குச்சீட்டு கொழும்பு, வன்னி, திகாமடுல்லை மற்றும் மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களுக்காக அச்சிடப்படவுள்ளன- என்றார். (ம)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆசை 1 கோடி ரூபா அம்பேல்!

கொழும்பு, ஜூன் 16

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுத்தருவதாகக்கூறி மொரட்டுவ பகுதியில் சுமார் ஒரு கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இதில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன என்று மோசடியில் சிக்கியுள்ளவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். மோசடியில் ஈடுபட்டவர் முன்னாள் அமைச்சர் ஒருவரின் இணைப்பாளர் என்றும், குறித்த நிறுவனம் இஸ்ரேல் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத்தருவதாகக் கூறி பலரிடம் தலா 8 லட்சம் ரூபா வீதம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

# மக்கள் கூடுவதற்கு வாய்ப்பளிப்பது சுகாதாரத்துறைக்கு நெருக்கடி!

## கூறுகிறார் சுகாதார அமைச்சர்



கொழும்பு, ஜூன் 16

வைரஸ் தொற்று நிலைமைக்கு மத்தியில் மக்கள் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டால் அது சுகாதாரத் துறைக்குப் பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை வெளியிட்டுள்ளனர் என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் பெரஹெராக்களை எவ்வாறு நடத்துவது என்பது பற்றி விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது தலதா மாளிகை மற்றும் கதிர்காமத்தில் ஏற்பாடு செய்யப்படும் பெரஹறாக்கள் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது பெரியளவில் பெரஹெராக்கள் ஏற்பாடு செய்யப்பட்டாலும் மக்கள் ஒன்றுகூடுவதற்கு இடமளிக்கப்படக்கூடாது என்று சுகாதாரத்துறையினர் உறுதியாகக் கூறினர். இது மக்களின் சுகாதாரப் பாதுகாப்பில் பெரும் பங்கு வகிக்கும் காரணியாகும்.

எதிர்பாராத விதமாக கொவிட் தொற்றுக்கு உள்ளான ஒருவர் இவற்றில் கலந்து கொண்டால் கூட நாட்டில் பெருமளவான மக்களுக்கு அது பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதையும் சுகாதாரத்துறையினர் சுட்டிக்காட்டினர். மிக விரைவில் பரவக் கூடிய இந்த வைரஸ் தொற்று நிலைமைக்கு மத்தியில் மக்கள் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டால் அது சுகாதாரத்துறைக்குப் பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதையும் சுகாதாரத் துறை சுட்டிக்காட்டியது. அதற்கமைய இந்தக் கலந்துரையாடலில் மத பேரணிகள் அல்லது பெரஹெராக்களில் இடம்பெறும் மத வழிபாடுகள் நிச்சயமாக முன்னெடுக்கப்பட வேண்டும். எனினும் இவற்றுக்கு மக்களுக்கு அனுமதியளிக்கப்படக் கூடாது என்றும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்- என்றார். (ப)


# இந்திராபுரத்துக்கு தனியான மின்மாற்றி

பளை. ஜூன் 16

பளை வேம்பொடுகேணி இந்திராபுரம் கிராமத்துக்கு இலங்கை மின்சார சபையால் தனியான மின்மாற்றி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொருத்தப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த 12 குடும்பங்களுக்கு இதுவரை இத்தாவிலில் உள்ள மின்மாற்றி ஊடாக மின்சாரம் வழங்கப்பட்டது.

இந்திராபுரம் கிராமத்தில் கடந்த 2019, 2020ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்தன. இவர்களுக்கு 115 தற்காலிக வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. வெடிபொருள்கள் அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு பளைப் பிரதேச செயலரின் முயற்சியால் தற்போது மின்சார விநியோகத்துக்கான கம்பங்கள் இடும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்த நிலையில் குடியிருப்புகள் மற்றும் பொது நோக்கு மண்டபம், கோவில் போன்றவற்றுக்கு இத்தாவிலில் உள்ள மின்மாற்றி மூலம் மின்சாரம் வழங்குவதற்கு காணப்படும் மின் பளு காரணமாக புதிய தனியான மின்மாற்றி இந்திராபுரம் கிராமத்துக்குப் பொருத்தப்பட்டுள்ளது. (ப-9)



# வெளிநாட்டு கைக்குண்டுகள் விசாரணையில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 16

மொரட்டுவ சொயிசாபுர பிரதேசத்தில் உள்ள உணவகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வாகனச் சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ரி-56 ரக துப்பாக்கித் தோட்டாக்கள் இரண்டும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகள் இரண்டும் கண்டுபிடிக்கப்பட்டன.

வெடிபொருள்கள் மொரட்டுவ மொரட்டுமுல்ல பகுதியில் உள்ள வீடொன்றின் பின்புறத்தில் புதைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த 29ஆம் திகதி மொரட்டுவ, சொய்சாபுரப் பகுதி உணவகத்தின் மீது பொலிஸார் முன்னிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டிலிருந்து பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவரே இதனை இயக்கியதாக தமது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ப)

# அழகுக்கலை ஊழியர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தமர்வு

பருத்தித்துறை, ஜூன் 16

பருத்தித்துறை அழகுக்கலை நிலைய ஊழியர்களுக்கான கொவிட் 19 தடுப்புக் கட்டுப்பாடு மற்றும் சுகநல மேம்பாட்டுடனான அழகுக்கலை மேம்பாடு பற்றியதான கருத்தமர்வு கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை நகர சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற கருத்தமர்வில் பருத்தித்துறைப் பகுதி அழகுக்கலை நிலைய ஊழியர்கள், யாழ்ப்பாண மாவட்ட அழகுக்கலை நிலையச் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொதுச் காதாரப் பரிசோதகர்கள் கலந்து கொண்டனர். பருத்தித்துறைப் பிரிவு 2 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்டினால் கொரோனா கட்டுப்பாடு மற்றும் அழகுக்கலை நிலையங்களின் அடிப்படைச் சுகாதார வசதிகள் மற்றும் சேவை வழங்கும்போது சுகநல மேம்பாட்டுடன் கையாளுதல் குறித்த விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டதோடு அழகுக்கலை நிலையங்களை பதிவுசெய்யும் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது. (ப-9)

புத்தளத்தில் வசிக்கும்

# வடக்கைச் சேர்ந்தோருக்கும் ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

## நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்கிறார் ரிஷாத் பதியுதீன்

**மன்னார், ஜூன் 16**

**கொரோனாவால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் மக்களுக்கு வழங்கப்படாத நிலையில், அதனை அரசியல் பாகுபாடுகளுக்கு அப்பால் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:


பெப்ரவரி மாதம் முதல் கொரோனாத் தொற்றுக் காரணமாக மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டமையுடன், பொருளாதாரத்திலும் தேக்க நிலை ஏற்பட்டது.

அதனையடுத்து அரசு மக்களுக்கு நிவாரணமாக 5 ஆயிரம் ரூபாவை வழங்கியது. இந்தக் கொடுப்பனவு வடக்கிலிருந்து இடப்பெயர்வுக்குள்ளாகி, புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு வழங்கப்படாமலிருந்த வேளையில், அதனைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், முன்னாள் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் வடக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கான அமைப்பின் தலைவர் எஸ்.எச்.எம்.மதீன் உள்ளிட்டவர்கள் உரிய தரப்புக்களுடன் பேசியதுடன், வேண்டுகோள்களையும் முன்வைத்திருந்தனர்.

ஏனைய பிரதேசங்களில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போதும், புத்தளத்தில் வாழும் மக்களுக்கு இவைகள் கொடுக்கப்படாமையானது, இந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். இது தொடர்பில், 'வடக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கான அமைப்பு எனது கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்து, இந்த மக்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படாமலிருப்பது தொடர்பில், ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகளைக் களைந்து, அவற்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருக்கு, எழுத்து மூலமான வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அரசியல் பார்வைகளுக்கு அப்பால் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவது அவசியம் என்பதும் வலியுறுத்தப்பட்ட நிலையில், தற்போது இந்த இடர்காலக் கொடுப்பனவை வழங்குவதற்கான ஏற்பாடுகள், தயார்படுத்தல்கள் இடம்பெறுகின்றன' - என்றார் ரிஷாத். (ப-56)

# இந்துக்கள் கதிர்காமத்தை தரிசிக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்துக!

*சுமணரத்ன தேரர் வலியுறுத்து*



கொழும்பு, ஜூன் 16

கதிர்காம பாதயாத்திரைக்குச் செல்லும் இந்துக்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி விட்டு உடனே மீண்டும் திரும்புவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் இறைவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறும் பாக்கியம் கிட்டும். எனவே இது தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்புத் துறையினரும் கவனத்தைச் செலுத்த வேண்டும் என மட்டக்களப்பு ஸ்ரீமங்களராம விகாரை விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கதிர்காம உற்சவம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. இந்து பௌத்த மக்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இடமாக கதிர்காமம் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் கிழக்கு மாகாணத்தில் சகல பிரதேசங்களிலிருந்து எமது இந்து மக்கள் கதிர்காமத்துக்கு நடந்து செல்கின்றார்கள். அவர்கள் நேர்த்திக் கடன்களை வைத்து அவற்றை நிறைவேற்றுவதற்காகச் செல்கின்றார்கள். ஆனால் இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா காரணமாக பயபக்தியுடன் இப்புனித பாதயாத்திரையை மேற்கொண்ட இந்து மக்கள் நடந்து கதிர்காமம் செல்லமுடியாத நிலையில் நிர்க்கதியாக இடைநடுவில் நிற்கின்றனர்.

அவர்கள் தமது பெற்றோர், குழந்தைகள், சொத்துக்களை விட்டுவிட்டு மீண்டும் திரும்பி வருவோமா? என எதிர்பார்ப்பில்லாமல் காட்டு வழியினூடாக இந்தப் பயணத்தை எதிர் கொள்வார்கள். அவ்வாறு கூறிவிட்டுப் புறப்பட்ட அவர்கள் தொடர்ந்து செல்லமுடியாது இடையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது மிகவும் கவலைக்கிடமானது.

எனவே இவர்களுக்காக அரசு மற்றும் பாதுகாப்பு துறையினர் மேலான கவனத்தைச் செலுத்தி இவர்கள் நடந்துசென்று கதிர்காமத்தில் தரித்திருக்காமல் தங்களது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிவிட்டு உடனே மீண்டும் திரும்புவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் அவ்வாறான நிலையிலிருந்து விடுபட்டு இறைவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறும் பாக்கியம் கிட்டும்- என்றார். (ப)

# ஐ.தே.க. பலவீனமடைந்தது அதிலுள்ள இனவாதிகளாலேயே

## தயாகமகேயின் கருத்துக்கு ஹக்கீம் பதிலடி




கொழும்பு, ஜூன் 16

ஐ.தே.க. பலவீனமடைவதற்கு தயாகமகே போன்றவர்களின் தவறான செயற்பாடுகளே காரணமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் திகாமடுல்ல மாவட்டத்தில் பெரும்பான்மை சிங்கள வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி இழப்பதற்கான காரணம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்பாடுகளே என முன்னாள் அமைச்சர் தயாகமகே தெரிவித்திருக்கும் கருத்துக்கு பதில் கூறுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.'

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி கடந்து வந்த பாதையைச் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் தேர்தல்களின்போது முஸ்லிம் காங்கிரஸ் சில இடங்களில் பிரதிநிதித்து வங்களை இழக்கும் நிலை கூட ஏற்பட்டது. எனினும் கூட்டுப்பொறுப்பைப் பேண வேண்டியதன் காரணமாக நாம் அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

நண்பர் தயாகமகே, தனது வாக்கு வங்கியைத் தக்க வைத்துக்கொள்ள முடியாத நிலையில் இன்று எம்மீது பழியைப் போட முனைகின்றார். திகாமடுல்ல மாவட்ட மக்களுக்குச் சேவை செய்திருந்தால், மக்களின் அபிலாஷைகளைக் கவனத்தில் கொண்டு செயற்பட்டிருந்தால் அந்த மக்களின் ஆதரவை தொடர்ந்து பேணிக்கொண்டிருக்க முடியும். அப்படி நடந்துகொள்வதை விடுத்து எதிர்ப்பு அரசியல் வாதங்களும், குழிபறிக்கும் செயற்பாடுகளுமே அந்த மக்களிடமிருந்து அவர் தூரமாகக் காரணமாகும். முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகம் இன்றும் கூட ரணிலின் பின்னால் இருப்பவர்கள் யாரென்பதை வெளிப்படையாகப் பார்க்க முடியும். மாயக்கல் விவகாரத்தில் என்ன நடந்தது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அப்பட்டமான இனவாதிகள் தான் ரணிலைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதில் ஒருவர் தான் இந்த தயாகமகே என்பவர். அவர்களது செயற்பாடுகளே ஐக்கிய தேசியக் கட்சியின் அழிவுப்பாதைக்கு பிரதான காரணமாகும்- என்றார். (ப)

# இராணுவத் தளபதியின் மகனுக்குப் பதவியுயர்வு

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் 11ஆவது இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ஹெமில்டன் வனசிங்கவின் மகன் டபிள்யூ.ஏ.எஸ். சஞ்ஜய வனசிங்க மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் இராணுவத் தளபதியின் மகன் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வு வழங்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது வரலாற்றில் சேர்க்கப்பட்டுள்ளது. (ப)

# சிறுமியை வன்புணர்ந்தாரென இங்கிலாந்துப் பிரஜை கைது

கொழும்பு, ஜூன் 16

சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவரை ஆனமடுவ பொலிஸார் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

ஆனமடுவ முதலக்குளிய பிரதேசத்தில் வசித்து வந்த 63 வயதான இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்துசெய்யப்பட்டார். சந்தேகநபர் 11 வயதான சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. கைது செய்யப்பட்டுள்ள இங்கிலாந்து நாட்டுப் பிரஜை 25 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை வந்து வசித்து வருவதுடன் அறிமுகமான பெண்ணொருவருடன் முதலக்குளிய பிரதேசத்துக்கு வந்து வசித்து வந்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் சந்தேகநபர் தனது மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என அந்தப் பெண் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஆனமடுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். தனக்கு இலங்கைக் குடியுரிமை இருப்பதாக சந்தேகநபர் கூறியுள்ள போதும் அதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# ஒரு லட்சம் இளையோருக்கு தொழிற்பயிற்சி வழங்க முடிவு

## அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 16**

**சுபீட்சத்தின் நோக்கு கருத்திட்டத்தைச் சாத்தியமாக்கும் அம்சமாக ஓர் இலட்சம் வேலையற்ற இளையோருக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று வெளிவிவகார மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஓர் இலட்சம் பேருக்கு தொழிற் பயிற்சிகளை வழங்கும் பொறுப்பு தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கிணங்க நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் வறுமையற்ற நாட்டை உருவாக்குவது தொடர்பில் வெற்றிகரமான விசேட திட்டமாக இது அமைந்துள்ளது. வறுமை நிலையிலுள்ள குடும்பங்களில் குறைந்த கல்வித் தகைமையுடனுள்ள இளையோர்களுக்குப் பயனுள்ள வகையில் பயிற்சி வழங்கி நாட்டைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புப் பெறப்படவுள்ளது. பயிற்சியையடுத்து நிரந்தர ஓய்வூதியத்துடனான பதவி பெற்றுக்கொடுக்கப்படும். இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படும் இளையோருக்காக தெரிவு செய்யப்பட்ட பயிற்சித் துறைகள் சில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை தொழிற் பயிற்சி அதிகார சபையூடாக மேற்கொள்கின்றன. அதற்கிணங்க 6 மாதகாலம் பயிற்சி முன்னெடுக்கப்பட்டு தொழிற் பயிற்சியின் இறுதியில் என்.வி.கியூ 3 சான்றிதழ் பெற்றுக்கொடுக்கப்படும்- என்றார். (ஐ)

# மிருகக்காட்சிச் சாலைகளுக்கு சில கட்டுப்பாடுகள் விதிப்பு

கொழும்பு, ஜூன் 16
தேசிய மிருகக்காட்சி சாலை மற்றும் தேசிய பூங்காக்கள் என்பன நேற்று முதல் திறக்கப்பட்ட நிலையில் அவற்றுக்கு சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.
தேசிய மிருகக்காட்சிசாலை, தேசிய பூங்காக்கள் என்பன உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக நேற்றுமுதல் மீள திறக்கப்பட்டன.
இவை கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.
தற்போது நாடு வழமைக்கு திரும்பி வரும் நிலையில் தேசிய மிருகக்காட்சிசாலை மற்றும் தேசிய பூங்காக்கள் திறக்கப்பட்டுள்ளன.
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வனஜீவராசிகள் திணைக்களம் சில நிபந்தனைகளையும் விதித்துள்ளது.
தேசிய பூங்காக்களுக்கு நுழைவதற்கு அனுமதியளிக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கும் அந்த திணைக்களம் தீர்மானித்துள்ளது.
யா எல மற்றும் உடவளவை தேசிய பூங்காக்களில் நாள் ஒன்றுக்கு நுழைய கூடிய அதிகபட்ச வாகனங்களின் எண்ணிக்கை 150 என வரையறுக்கப்பட்டுள்ளது.
அத்துடன் மின்னேரியா, கவுடுல்ல மற்றும் வஸ்கமுவ தேசிய பூங்காக்களில் 50 வாகனங்களும், வில்பத்து தேசிய பூங்காவுக்குள் நுழைவதற்கு 80 வாகனங்களும் அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
அதேநேரம் ஹற்றன் சமவெளி தேசிய பூங்காவுக்குள் நுழைய 50 சுற்றுலா குழுவினர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
இதுதவிர, புறா தீவு தேசிய பூங்காவுக்குள் நாள் ஒன்றுக்கு 50 படகுகள் மாத்திரமே பயணிப்பதற்கு அனுமதியளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# 30 அரபு பாடசாலைகள் இலங்கையில் உள்ளன

கொழும்பு, ஜூன் 16
இந்த நாட்டில் அடிப்படைவாதிகளால் அமைக்கப்பட்ட 30 சர்வதேச அரபு பாடசாலைகள் செயற்படுகின்றன என்று பொதுபலசேனாவின் செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த சர்வதேச அரபுப் பாடசாலைகள் அனைத்தும் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் துருக்கி அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டவை. திஹாரி, புத்தளம், மாவனல்லை ஆகிய பிரதேசங்களிலேயே இவை அமைக்கப்பட்டு அவற்றின் பிரதானிகளாக ஜமாதே இஸ்லாமி போன்ற அடிப்படைவாத அமைப்பினர் செயற்படுகின்றனர். இருப்பினும் இந்தப் பாடசாலைகளின் பெயர்கள் அடிக்கடி மாறறறப்பட்டு அவை தொடர்பான சரியான தகவல்களை பெறுவதில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன - என்றார். (ம)



## பருத்தித்துறையில்
# உணவு நிலையங்களில் சோதனை நடவடிக்கை!

பருத்தித்துறை ஜூன் 16
பருத்தித்துறை நகரப் பகுதியில் உணவு கையாளும் நிலையங்கள்மீது நேற்றுமுன்தினம் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவாக இணைந்து மேற்கொண்ட இந்தத் திடீர் பரிசோதனைகளில் சுகாதார விதிமுறைகளை மீறி உணவு கையாளலில் ஈடுபட்ட உணவகங்களிலிருந்த சுகாதாரமற்ற உணவுகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. சுகாதாரமற்ற உணவுகளை வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம

# கஞ்சாவைக் கைமாற்ற முயன்ற நால்வர் கைது

## பெருமளவு கஞ்சா மீட்பு

சாவகச்சேரி ஜூன் 16
சாவகச்சேரி நகரப் பகுதியில் கஞ்சாவைக் கைமாற்றும்போது நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து பெருமளவு கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் பள்ளிவாசலுக்கு அண்மித்தபகுதியில் இடம்பெற்றது. கஞ்சா கைமாறப்படவுள்ளது என கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கஞ்சா கைமாறும்போது சந்தேகநபர்களைக் கைது செய்தனர். அவர்களில் ஒருவர். ஏற்கனவே கஞ்சாவுடன் பிடிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 26 ஆம் திகதி வரை அவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.
அவர்களிடம் முறையே 1100 மில்லிகிராம், 1210மில்லிகிராம், 1240 மில்லிகிராம், 1160 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது (ப-9)

# 48ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வேட்டைக்காரர்கள்!

## புதிய ஆய்வில் தகவல்

கொழும்பு, ஜூன் 16
இலங்கையின் ஆதிமனிதர்கள் 48 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு விலங்குகளின் எலும்புகளிலிருந்து கருவிகளை வடிவமைத்து குரங்குகள் மற்றும் அணில்களை வேட்டையாடப் பயன்படுத்தினர் என்று புதிய ஆய்வொன்றின் ஊடாக தெரியவந்துள்ளது.
கடந்த ஆண்டு, பாஹீன் லீனா குகையில் காண ட்ட குரங்கு மற்றும் அணில் எலும்புகளை ஆய்வுசெ தே ஆராய்ச்சியாளர்கள் குறித்த தகவலை வெளியிட ர். இந்தக் குகை தெற்காசியாவில் ஹோமோ சேபியன் ன் ஆரம்பகால புதை வடிவ தோற்றத்தின் இடமாகு 4 ஆயிரம் முதல் 48 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கு வெவ்வேறு காலகட்டங்களில் மனிதர்கள் இந்தப்பகு ய ஆக்கிரமித்துள்ளனர் என்று அந்த ஆய்வில் மேலும் ப் பிடப்பட்டுள்ளது.


# மாற்றுக் கட்சியினரைத் தாக்கி பரப்புரை செய்யாதீர்!

## மொட்டு வேட்பாளர்களுக்கு ஜனாதிபதி கூறினாராம்

அம்பாறை, ஜூன் 16
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கனவான் அரசியல் பரப்புரை பொறிமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு கண்டிப்பான உத்தரவு கொழும்பில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது.
கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப் பரப்புரையின் போது எந்த வேட்பாளரையும் சரி, எந்தக் கட்சியையும் சரி கோத்தாபய ராஜபக்ஷ தாக்கிப் பரப்புரை செய்யாமலேயே மகத்தான வெற்றியை ஈட்டினார் என்றும் இதே முன்மாதிரியை மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
வியத்கமே அமைப்பு சார்பாக மொட்டுச் சின்னத்தில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுகின்ற அம்பாறை பிராந்திய முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திலக் ராஜபக்ஷ அம்பாறை பிராந்திய வர்த்தக சங்கத்தினரைச் சந்தித்துப் பேசியபோது இதைத் தெரிவித்தார். இது மிகவும் நல்ல முன்மாதிரியான விடயம், எந்தக் கட்சியையும், யாரையும் தாக்கி நோகடிக்கின்ற பரப்புரைகளை நாம் தவிர்த்துக்கொண்டு எமது கொள்கைகளை எடுத்துரைத்து மக்கள் மனங்களை வெல்ல வேண்டும்- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-23)

# சிங்கள - பௌத்த பேரினவாதமே சஜித்தின் மக்கள் சக்தியின் இலக்கு

## மஹிந்த, ரணில் என எவரினதும் அரசியலை ஏற்கேன் என்கிறார் மங்கள



**கொழும்பு, ஜூன் 16**
**தென்னிலங்கை வாக்குகள் சரிவடைந்துவிடும் என்ற மாயைக்குள் சிக்கி மௌனம் காத்துக்கொண் டிருக்கும் போக்குடைய அரசியலை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால்தான் அரசியல் செயற்பாடுக ளில் இருந்து முற்றாக வெளியேறியுள்ளேன். இனி ஒருபோதும் அரசியலுக்குத் திரும்பமாட்டேன். இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நிதி அமைச் சரான மங்கள சமரவீர.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:
தென்னிலங்கை வாக்குகளுக்காக சிங்கள பேரினவாதத்தை முன்னி லைப்படுத்தும் பொதுமக்கள் முன் னணியின் பிரதியாகவே ஐக்கிய மக்கள் சக்தியும் காணப்படுகின்றது. அந்தக் கட்சியிடம் மாற்று சக்தி என் பதற்கான கொள்கைகள் உட்பட எந்தவிதமான இலட்சணங்களும் காணப்படவில்லை. நாட்டில் ஜன நாயக விழுமியங்கள் நிறைந்த இன வாதமற்ற புதிய அரசியல் கலாசா ரத்தை கட்டியெழுப்புவதற்கான வலுவான சக்தியொன்றை எதிர் பார்த்து பொதுமக்கள் இருக்கின்ற னர். இந்த நிலையில் எவ்விதமான கொள்கைகளோ, இலக்குகளோ இல்லாத கையறு நிலையில் தான் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் காணப்படுகின்றன. ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரே மதாஸவும் தனிப்பட்ட முறையில் சிறந்தவர்களாக காணப்பட்டபோதும் அடிப்படைவாதிகளின் பிடிக்குள் சிக் கியுள்ளனர். ஜனாதிபதி கோத்தாபய நாட்டை இராணுவ ஆட்சிக்குள் நகர்த்திச் செல்கின்றார். நாட்டின் நல்லொழுக்கத்தைக் கட்டியெழுப்பு வதற்கு இராணுவத்தை முன்னி லைப்படுத்திய செயலணி அமைக் கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத் தில் தொல்பொருளின் பெயரால் அபகரிப்புக்களைச் செய்வதற்கு செயலணி அமைக்கப்பட்டுள்ளது.
சிறுகுழந்தை உள்ளிட்டவர்களை கொலைசெய்த மனிதாபிமானமற்ற வருக்கு நீதிமன்றம் தண்டனை அளித்துள்ளபோதும் பொதுமன்னிப் பளித்து விடுவிக்கப்படுகின்றார். கொரோனாவின் பெயரால் உலக சுகாதார நிறுவனத்தின் விதிகளை யும் பொருட்படுத்தாது முஸ்லிம்க ளின் பாரம்பரியங்களை மீறும் வகையில் இறுதிச்சடங்குகள் மேற் கொள்ளப்படுகின்றன.
முச்சக்கரவண்டிச்சாரதிகள் சங்கத் தலைவர் கொலை, துப்பாக்கி கலா சாரம் என்று சட்டத்தின் ஆட்சி கேள் விக்குறியாகியுள்ளது. எமது ஆட்சிக் காலத்தில் நாட்டில் காணப்பட்ட நிலைமைகள் நேரெதிராக மாறியுள் ளன.
இவைபற்றி எதிரணியாக அல்லது நாட்டிற்கு தலைமைத்துவம் வழங் கத் தயாராகும் மாற்று அரசியல் அணியினர் உரிய நிலைப்பாடு களை வெளிப்படுத்த வேண்டும். அதில் பின்னிற்கவே முடியாது.
ஆனால் தேர்தலில் தென்னிலங்கை வாக்குகள் சரிவடைந்துவிடும் என்ற மாயைக்குள் சிக்கி மௌனம் காத் துக்கொண்டிருக்கும் போக்குடைய அரசியலை ஏற்றுக்கொள்ள முடி யாது- என்றார். (ம)




## 160 கூட்டங்களில் பங்கேற்பார் சஜித்

கொழும்பு, ஜூன் 16
பொதுத்தேர்தலை இலக்குவைத்து சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக் கள் சக்தி 11 ஆயிரத்து 160 பரப்புரைக் கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டுள் ளது. 160 பிரதான பரப்புரைக் கூட்டங்க ளில் சஜித் பிரேமதாச பங்கேற்பார் என தெரியவருகின்றது.
ஒவ்வொரு தொகுதியிலும் சிறு அளவி லான ஆயிரம் கூட்டங்களை நடத்துவ தற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. போட்டி யிடும் வேட்பாளர்கள் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி இதற்கான ஏற் பாடுகளைச் செய்யவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான விசேட சந் திப்பொன்று இவ்வாரம் நடைபெறவுள் ளது. இதன்போதும் பரப்புரை வியூகங் கள் பற்றி அலசி ஆராயப்படவுள்ளது என சஜித் அணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ம-44)

## நான்தான் அடுத்த பிரதமராகுவேன்!

### கைதிகள் கூறினர் என ராஜித தகவல்

கொழும்பு, ஜூன் 16
இலங்கையின் அடுத்த பிரதமர் நான்தான் என்று நீர்கொழும்பு சிறைச்சாலையில் உள்ள கைதிகள் கூறின ர் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள் ளார்.
சிறையில் இருக்கும்போது தன்னை அரச் னைப் போல் கவனித்துக் கொண்டனர் என வும், கைதிகள் கௌரவமாக அன்புடன் தனது தேவைகளை நிறைவேற்றினர் எனவும் அவர் கூறியுள்ளார்.



கைதிகள் தான் குளிப்பதற்குத் தண்ணீரைச் சுட வைத்து கொடுத் தனர் எனவும், வாழ்க்கையில் மிகவும் சுவை யானதேங்காய்ச் சம்பலை சிறை யிலேயே சாப்பிட்டேன் என்றும் ராஜித குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை, ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள ராஜிதசேனாரத்ன, ஜனா திபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு பிரதமர் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷவுடன் பணியாற்றுவதற்குப் பதிலாக தன்னுடன் இலகுவாகப் பணியாற்ற முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (ப)



## வனங்களை அழித்த இருவர் கைது


கொழும்பு, ஜூன் 16
பலாங்கொட மஹாதென்ன வனப்பகுதிக்குள் சட்ட விரோதமாக நுழைந்து மரங்களை அழித்த இரு வர் கைது செய்யப்பட்ட னர்.
இம்புல்பே பகுதியில் வசித்துவரும் இரண்டு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். வனப்பகுதியில் உள்ள பெறுமதியான மரங் களை அழித்துள்ள தோடு, அவ்விடங்க ளில் மிளகு பயிர்செய் கையை மேற்கொண் டுள்ளனர் எனவும் பலாங் கொடை வன அலுவலர் தெரிவித்துள்ளார். (ம)

## சஜித் அணியினர் அரசமைத்தால் கோத்தாவின் ஆதரவு கிடைக்கும்

### *ஹர்ஷ டி சில்வா நம்பிக்கை*

கொழும்பு, ஜூன் 16
நாடாளுமன்றத் தேர்தலில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிபெறும் பட்சத்தில், நாட்டின் நலன் கருதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ புதிய அரசுடன் இணைந்து செயற்படுவார் என்ற நம்பிக்கை உள்ளது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொதுத்தேர்தலில் எமது அணிக்கு சாதக மான சூழ்நிலை இருக்கின்றது.
எனினும் மக்கள் எவ்வாறான ஆதரவை, ஆணையை வழங்குவார்கள் என்பது ஓகஸ்ட் 5ஆம் திகதியே தெரியவரும். தேர் தலில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிபெறும் பட்சத்தில், நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணக் கூடிய புத்தாக்க சிந்தனை எமது அணியி லுள்ளவர்களிடம் இருக்கின்றது.
ஜனாதிபதி பதவியை வகித்த மைத்திரிபால சிறிசேனவும், தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும் ஒரே விதத்தில் செயற்படக்கூடியவர்கள் என நான் நம்ப வில்லை. எனவே, முன்னர் ஏற்பட்டதுபோல் எதிர்காலத்திலும் பிரச்சினைகள் உருவாகும் என்ற ஊகத்தின் அடிப்படையில் கருத்துத் களை வெளியிடமுடியாது.
கோத்தாபய ராஜபக்ஷவே 2025ஆம் ஆண்டு ஜனவரிவரை நாட்டில் ஜனாதிபதி யாக இருப்பார். எனவே, அடுத்து அமையும் நாடாளுமன்றம் அவருடன் இணைந்து செயற்படவேண்டும். சிறப்பாக செயற்படக் கூடிய, புத்தாக்க சிந்தனையுடைய தரப்பு களுடன் இணைந்து நாட்டில் தற்போது நிலவும் பொருளாதாரப் பிரச்சினைக ளுக்குத் தீர்வைக்கண்டு நாட்டை மீட்டெ டுக்கவே ஜனாதிபதி விரும்புவார் என நம் புகின்றேன்.
கட்சி மற்றும் குறுகிய அரசியல் நோக்கங்க ளுக்கு அப்பால் நாட்டின் எதிர்காலமே அனைவருக்கும் முக்கியம். இந்த நிலைப் பாட்டிலேயே ஜனாதிபதியும் இருக்கிறார் என்ற நம்பிக்கை உள்ளது- என்றார். (ம-44)

# மரண அறிவித்தல்



தோற்றம் • 02 • 02 • 1949

மறைவு • 15 • 06 • 2020

## சிவகுருநாதன் இரங்கராஜா (B.A, B.com, M.Sc)

இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் இறுதி பிரதம செயலாளர், வடக்கு மாகாண சபையின் முதலாவது பிரதம செயலாளர், வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுநரின் முன்னாள் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் முன்னாள் செயலாளர், யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேரவை உறுப்பினர்)

யாழ்ப்பாணம் பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், யாழ் நல்லூரை வதிவிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் இரங்கராஜா நேற்று (15.06.2020) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பொன்னாலையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கு.பொ.சிவகுருநாதன் (நாராயணதாசன்), ரோகிணியம்மா தம்பதியரின் அன்பு மகனும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் மனோன்மணி தம்பதியரின் மருமகனும், செம்மனச் செல்வியின் அன்புக் கணவரும், கு.பொ.சி வரதராஜா (முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம்), பாக்கியலட்சுமி, சௌந்தரராஜா (பொறியியலாளர்-Bahrain), விஜய லட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரரும், தர்மாம்பிகை, காலஞ்சென்றவர்களான புலேந்திரன், தர்மகுலசிங்கம் மற்றும் மதிவதனி, காலஞ்சென்ற திருஞானசம்பந்தன் மற்றும் நாவுக்கரசன், கலைமகள், ஆரூரன், மணிவாசகன், வாதவூரன் ஆகியோரின் அன்பு மைத்து னரும், அரவிந்தன், அனந்தன், அரங்கன் ஆகியோரின் சிறிய தந்தையும், ஜனனி, கஜானி, நளினி, மாலினி, அகிலன், கிரிஷாந்தி, அருணன், அஞ்சனன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மாமனும் மதுசூதனின் (பொறியியலாளர்) அன்பு பெரியப்பாவும், சங்கீதா, ஆர்த்தி, கௌதமி, கீர்த்தனா, கிருஷ்ணா, சரண்யா, அனிருத்தன், அச்சுதன், மானஸா, ஆதித்யன், அருச்சுனன், ஆரணி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை இல.62, விவேகானந்தா மேடு, கொழும்பு-13 இல் அமைந்துள்ள இல்லத்தில் பிற்பகல் 02 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

172, கோவில் வீதி,
நல்லூர்.

தகவல் :
சி. சௌந்தரராஜன் (சகோதரன்-Bahrain)
0097339606349
த.அஞ்சனன் (மருமகன்) 077 341 4172

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 06 . 1935

மறைவு 15 . 06 . 2020

### திருமதி தர்மலிங்கம் நல்லபிள்ளை

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் நல்லபிள்ளை நேற்று (15.06.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா தர்மலிங்கத்தின் பாசமிகு துணைவியாரும், தர்மரத்தினம், தர்மகுமார், தர்மராசா, தர்மகுலசேகரம், தர்மஸ்ரீ ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராணி, சுஜாதா, கலா ராணி, கேதீஸ்வரி, பாமதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருஷ்ண பிள்ளை, காலஞ்சென்ற சண்முகம் மற்றும் முத்துப்பிள்ளை, அன்னம், தேவதாஸ், காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கோசனா, றோசனா, தர்சிகா, கௌசிகா, றஜித்தா, விஜயதரன், தினேஸ், நிறோஜா, விதுசன், குவேந்தினி, திவாகரன், ஆகாஷ், ஆதிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஷ்விதா, ஆராதனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் அந்தரானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 0777 300 171

தகவல் :
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 . 01 . 1951

மறைவு 28 . 06 . 2019

### அமரர் கதிரவேல் வைரவன்(வைரவப்பிள்ளை)

(ஓய்வுபெற்ற சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

*ஆண்டொன்று ஆனதப்பா*
*மூண்ட துன்பம் எம் மனதில்*
*மூளாத் தீப்போல கனன்றிடுதே*
*வேண்டும் எம் தந்தை இறைவன்*
*சீர் கழலை நண்ணிடவே*
*இறைஞ்சுகிறோம் அப்பாவே*
*எம் இறையை எந்நாளும்*

அன்னாரின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.48 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

அம்மன் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.
076 3685 671

## மரண அறிவித்தல்



### திருமதி பூபதி செல்வத்துரை

தோற்றம் :- 15.09.1933 மறைவு:-15.06.2020

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூபதி செல்வத்துரை நேற்று (15.06.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தா.செல்வத்துரை (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம்-நன்னிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளை, சின்னக்குட்டிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், வசந்தா (ஓய்வுநிலை ஆசிரியர்), சித்திரா (ஓய்வுநிலை ஆசிரியர்), பவானி (ஆசிரியர்-யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை), நந்தினி (Analitical Chemist Boral Construction-அவுஸ்திரேலியா), லோகீஸ்வரன் (சிரேஸ்ட விரிவுரையாளர், பௌதீகவிஞ்ஞானப் பிரிவுத் தலைவர், திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்லைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரலிங்கம் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் CEB), மகேந்திரன், முருகானந்தன் (Project Manager, Sydney Trains-அவுஸ்திரேலியா), கலையரசி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இரத்தினம்மா, செல்லம்மா மற்றும் சரஸ்வதி (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சரஸ்வதி, கனகசுந்தரம், வன்னித்தம்பி, ஆறுமுகம், நல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், ஜனகன் (Senior Quantity Surveyor, Blue Ocean Group of Company, Colombo), இந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், உடுவில் பிரதேச செயலகம்), கர்ணிகா (மின்சார சபை, சுன்னாகம்), அருண்முகன் (மாணவன், றுகுண பல்கலைக்கழகம்), ஹரினி (Faculty of Law, University of Macquarie, Australia), ரக்ஷயன் (Girraween Selective High School-அவுஸ்திரேலியா), லோஜினி (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
T.P: 021 221 3745

தகவல் :
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 21 . 02 . 1931



மறைவு 19 . 05 . 2020

கடந்த (19.05.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் நடராஜா பூமணி

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நாளை (17.06.2020) புதன்கிழமை கற்புலம் வீதி, உரும்பிராயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கற்புலம் வீதி, உரும்பிராய் — குடும்பத்தினர்.


## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் ஆஸ்பத்திரி வீதி ரெம்பிள் வீதிக்கு Temple Road அண்மையில் வீடு வாடகைக்குண்டு

தொடர்பு : 077 639 8097


## மரண அறிவித்தல்



### சண்முகராசா யோகேஸ்வரன் (தேவன்)

இளவாலையைப் பிறப்பிடமாகவும், கட்டுவன், அளவெட்டி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சண்முகராசா யோகேஸ்வரன் கடந்த (13.06.2020) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராசா இராசமணி தம்பதியரின் அன்புமகனும், சிவரஞ்சிதாதேவியின் அன்புக் கணவரும், யோ.துஷ்யந்தன் (2ஆம் வருடம் சபரகமுவ பல்கலைக்கழகம் அளவியல் விஞ்ஞானபீடம்), யோ.தனுசன், யோ.திவ்யா (மாணவி, அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ச.சிவபாலகிருஷ்ணன் (ராஜன் ஆட்டோ), சிவபாஸ்கரன் (நோர்வே), சிவஜெனிஸ்வரன் (ரவி ஆட்டோ), ரஜிதா, சிவராஜேஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், லிங்கநாதன் (லண்டன்), சிவரஞ்சிதமலர் (ஜேர்மனி), உதயகுமாரி (பிரான்ஸ்), சிவமலர் (சுவிஸ்), சிவபாலன் (லண்டன்), சிவகுமார், சிவரூபன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


## வேலை ஆள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான பிடவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் கணினி அனுபவமுள்ள பில் கிளார்க் (சிட்டை எழுதுனர்) உடன் தேவை.

தொடர்பு:
021 222 9286, 077 8348 789


ES Printers




# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com


## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 11 . 1925



மறைவு 15 . 06 . 2020

### வல்லிபுரம் செல்வராசா

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் - கமநல சேவைத் திணைக்களம்)

தலவாக்கலையைப் பிறப்பிடமாகவும் 762, K.K.S, வீதி தட்டாதெரு, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்வராசா அவர்கள் நேற்று (15.06.2020) திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் அரியமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நித்தியலட்சுமியின் அன்புக் கணவரும் குமாரதேவன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர், நீர்பாசனத் திணைக்களம்) காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் மோகனதேவன் (மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம்,வடமாகாணம்) ஆகியோரின் ஆருயிர் தந்தையும் இரத்தினமாலா ( ஓய்வுபெற்ற பல் வைத்திய நிபுணர்), அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் மோகனப்பிரியன் (பொறியியலாளர்), ஜெயவாணி (வைத்தியர் - இங்கிலாந்து), Dr.பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் யனிஸ் அவர் களின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான கார்த்தியேசு நாகரத்தினம், வல்லிபுரம் சேனாதிராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல் :
குடும்பத்தினர்.

762(500 Old) K.K.S Road
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

குமாரதேவன் : 077 748 8441
மோகனதேவன் : 077 386 8576
(மகன்கள்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 01 1957



மறைவு 10 06 2020

### திரு விஜயராஜா கௌரீஸ்வரன்

ஆலங்குளாய் சண்டிலிப்பாயை பிறப்பிடமாக கொண்டவரும், முழுங்காவில் நீர்ப்பாசன இலாகாவில் பணியாற்றியவரும், தற்போது ஜெர்மனி டோர்ட்முண்ட் இல் வசித்து வந்தவருமான திரு விஜயராஜா கௌரீஸ்வரன் அவர்கள் 10.06.2020 அன்று இறைபதம் அடைந்தார் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். திரு கௌரீஸ்வரன் அவர்கள் காலஞ்சென்றவர்களான விஜயராஜா செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்ரீ தயாரூபியின் அன்பு கணவரும், நர்மதா, பிருந்தா,ஆகியோரின் அன்பு தந்தையும், நிவேந்தனின் அன்பு மாமனாரும், தரண்யா, கார்த்திகன், ஆகியோரின் பாசமிகு பேரனும், லிங்கேஸ்வரன் (கொழும்பு), நந்தேஸ்வரி (கொழும்பு), Dr. லோகேஸ்வரி (கொழும்பு), திலகேஸ்வரி (பிரான்ஸ்), சிறீஸ்வரி (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), கெங்கேஸ்வரன் (இங்கிலாந்து), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெகதாம்பாள் (கொழும்பு), அமரர் ராஜகோபால், பேராசிரியர் நவரட்ணராஜா (கொழும்பு), வசந்தராஜன் (பிரான்ஸ்), சக்கராயுதன் (கனடா), வனிதா (கனடா), வசந்தி (இங்கிலாந்து), ஞானரூபி (வவுனியா), கலைரூபி (யாழ்ப்பாணம்), மயூரன் (அமெரிக்கா), இரதிரூபி (கனடா), வதனரூபி (இங்கிலாந்து), அமரர் இராமேஸ்வரன், பவானிரூபி (நெதர்லாந்து), சடாட்சரன் (சுவிஸ்), சிறீதரன் (இங்கிலாந்து), பாஸ்கரன் (சுவிஸ்), ஆகியோரின் மைத்துனரும், மோகனச்சந்திரன் (வவுனியா), செல்வராசா(யாழ்ப்பாணம்), பத்மினி (அமெரிக்கா), சாந்தகுமார் (கனடா), நரேந்திரசிங்கம் (ஜெர்மனி), பிரான்ஸ் (நெதர்லாந்து), ஆனந்தி (சுவிஸ்), தாமரா (இங்கிலாந்து), கோமதி (சுவிஸ்), ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.06.2020 அன்று ஜெர்மனி நேரம் முற்பகல் 10 மணி தொடக்கம் 1.00 மணி வரை நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம் .

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
விவரங்களுக்கு :
லிங்கேஸ்வரன் (சகோதரன்) : 0772110005
Dr.லோகேஸ்வரி (சகோதரி ) : 0777562740

**Global Access Employment**

எமது நிறுவனத்திற்கு பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை.

**தகைமை :- கனினி அறிவு , ஆங்கில மொழி தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.**

**தொடர்புகளுக்கு : 021 3150 148, 076 480 4482**

முகவரி :- இல. 600, பிரதான வீதி, சங்கனை.

**தேவை**

எமது அலுவலகத்தில் பணிபுரிய அலுவலக உதவியாளர் பெண் / ஆண் தேவை.
சம்பளம் அடிப்படை 15000/= பெறலாம்
தகைமை A/L / O/L போதுமானது

**சுஜித் எண்டப்பிரைஸ்**
**கொடிகாமம்**
**077 719 8380 , 077 904 1258**

# இரண்டாம் பாகம் வெளியிடவே விக்னேஸ்வரன் நிதி கேட்கிறார்

## சாடுகின்றார் பிரதேச சபை உறுப்பினர்

**யாழ்ப்பாணம், ஜூன் 16**

**வடக்கு மாகாண சபை முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் பதவியேற்ற காலத்தில் அவருடைய மேடைப் பேச்சுகளைப் பார்த்து எழுதி மேடைகளில் வாசித்து புத்தகம் எழுதி வெளியிட்டது தான் அவருடைய முதற்கடமையும் தமிழ் மக்களுக்கு செய்த உதவியுமாக இருந்தது. தற்போது தனது அடுத்த பேச்சுகளைப் பார்த்து எழுதி அடுத்துவருடம் நாடாளுமன்றில் வாசித்து இரண்டாம் பாகமாக புத்தகம் வெளியிடவே மக்களிடம் காசு கேட்கிறார்.**

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார், மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான சி. மகேந்திரன்.

விக்னேஸ்வரனின் இந்த விடயத்தில் தமிழ் பேசும் மக்கள் விழிப்பாய் அவதானமாய் இருங்கள் என்றும் மகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களே விழிப்பாய் இருங்கள் இனிவரும் 5 வருடங்களுக்கு தமிழ் பேசும் மக்கள் புத்திசாலிகளையும் நேர்மை யானவர்களையும் சமூகத்துக்கு உதவக் கூடியவர்களையும் வடக்கிலிருந்து பணியாற்றக்கூடிய வினைத்திற னான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு மட்டுமே உங்கள் உதவிக் கரத்தை நீட்டுங்கள்.


விதிமுறைகளுக்கு மாறாக ஊடகத்தில் விளம்பரம்செய்து காசு கேட்டு கணக்கு காட்டுகின்ற தமிழின விரோதிகளுக்கு ஒரு சதம் பணமும் வழங்கக்கூடாது.

கடந்த மாகாண சபைக்காலத்தை நாம் பொற்காலமாக எண்ணியிருந்தோம். ஆனால் முதலமைச்ச ருக்கு நிர்வாகம் திட்டமிடல் தெரியாது என்பதை வடக்கின் 5 மாவட்டங்களிலுமுள்ள தமிழ்பேசும் மக்கள் பின்னாள்களில் உணர்ந்துவிட்டனர்.

எனவே இந்தத் தவறை தமிழ் மக்கள் இனியும் விடக்கூடாது. கொஞ்சம் என்றாலும் தமிழ் மக்களுக்கு உதவக்கூடிய நிர்வாகம் திட்டமிடல், அபிவிருத்தி நிர்வாகம் தெரிந்த ஒருவரை தெரிவு செய்யுங்கள்.

தமிழ் பேசும் மக்களின் தலைவனாக இருந்து மறைந்த தந்தை செல்வநாயகம்கூட தேர்தல் காலத்தில் தனது சொந்தச் சொத்துக்களை விற்றே தேர்தலில் போட்டியிட்டு வென்றார். எவரிடமும் கையேந்தி ஒரு சதம் பணம்கூடக் கேட்டதில்லை- என்றார். (த-50)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 17.05.2020 அன்று இறைபதம் எய்திய எமது அன்புச் சகோதரன்

**அமரர்**

**திரு.செந்தில்வேல் மனோகரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் வருகை தந்துஅன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

**குறிப்பு:** அழைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கோகுல வீதி,**
**கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.** **தாய், சகோதரர்கள்.**

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

**உப அலுவலகம். உடுவில்.**
**வட்டாரம் -2 மல்வம் வீதி, ஆதன இல 84/7**

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-2 மல்வம் வீதியில் அமைந்துள்ள 84/7 இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில், பசுபதி சீவரத்தினம் பெண் ஜெயரஞ்சினி எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு நா.அரியபுத்திரன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தற்காலம் வலிகாமம் தெற்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறையில் அமைந்துள்ள "சான்றான் தோட்டம்" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு.1 குளி7.30 உம் வீடும் குழாய்க்கிணறும் பயிர்வகைகளும் உடைய இந்த ஆதனமானது பரமசாமி கணேசலிங்கம் என்பவரால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் 1983-06-20ந் திகதி நொத்தாரிசு எஸ். கனகசபாபதி முகதாவில் நிறைவேறிய 8961ம் இலக்க அறுதி உறுதி மூலம் உடுவில் மல்வம் மாணிக்கம் யோசேப்புவிற்கும் பெண் திரேசம்மாவிற்கும் எழுதப்பட்டது. குறித்த மாணிக்கம் யோசேப்புவும் பெண் திரேசம்மாவும் காலஞ்சென்றுவிட்டார்களென்றும் அவர்கள் விட்டுச் சென்ற பின்னால் விபரிக்கப்படும் ஆதனத்துக்கு அவர்களின் ஏகவாரிசான நானே சொந் தக்காரி என்றும் திருமணம் செய்த காரணத்தால் பசுபதி சீவரத்தினமும் பெண் ஜெயரஞ் சினியு- மாகிய நாங்கள் குறித்த வெளிப்படுத்தல் உறுதி எழுத வேண்டிய தேவை ஏற்பட்டதென்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் உத்தரவு பெற்ற உலாந்தா T.தங்கராஜா அவர்களால் 2010.12.27 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 4131 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 1குளி 6.35 உம் அதற்குரியவைகளும் இதற்தெற்கெல்லைகளாக

**கிழக்கு :-** மாணிக்கம் ஐயம்பிள்ளையின் ஆதனமும்.
**வடக்கு :-** மாணிக்கம் ஐயம்பிள்ளையின் ஆதனமும் ஒன்பதடியகலப்பாதை முகப்பும்
**தெற்கு :-** சின்னட்டி இரத்தினம் பெண் ஞானம்மா
**மேற்கு :-** சின்னத்துரை பெண் ராணி

எனவே மேற்குறித்த ஆதனத்தினை பரமசாமி கணேசலிங்கம் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது பரமசாமி கணேசலிங்கம் எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.


மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்குபிரதேச சபை**
**சுன்னாகம்.**

**2020.06.09**

## மரண அறிவித்தல்

**பிறப்பு**
02
02
1949



**இறப்பு**
15
06
2020

## சிவகுருநாதன் இரங்கராஜா

**(முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர்**
**வடக்கு மாகாண பிரதம செயலாளர்)**

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான சிவகுருநாதன் இரங்கராஜா நேற்று (15.06.2020) திங்கட்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவ்குருநாதன் ரோகினி அம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் மனோன்மணி தம்பதியரின் மருமகனும், செம்மணச்செல்வியின் பாசமிகு கணவரும், K.P.S. வரதராஜா (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி), பாக்கியலட்சுமி, சௌந்தரராஜா (Bahrain), விஜயலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சம்பந்தன் மற்றும் திருநாவுக்கரசன், ஆரூரன், வாதவூரன் சுந்தரமூர்த்தி, கலைமகள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை 62, விவேகானந்தமேடு, கொட்டேனா, கொழும்பு-13 இல் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொரளை, கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**சகோதரன்-K.P.S. வரதராஜா**
**ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி**
**077 026 9992, 077 386 8562**

## கோத்தா...

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராஜா நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்று கடும்போக்குவாத சிங்களப் பிரமுகர்கள் வலியுறுத்தியுள்ளனர். கிழக்கைப் போன்று தொல்பொருள் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் வடக்கிலும் ஜனாதிபதி விசேட செயலணியை நிறுவ வேண்டும் எனவும் அவர்கள் ஜனாதிபதியிடம் அழுத்தம் கொடுத்துள்ளனர். இது தொடர்பில் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் தாயகத்தை அபகரித்து இங்கு தமிழரின் வரலாற்றுத் தடயங்களை அழித்து திரிவுபடுத்தி இதைப் பௌத்த சிங்கள வரலாற்றைக் கொண்ட தேசமாக மாற்றுவதே சிங்களப் பேரினவாதத்தின் குறிக்கோளாக அன்று தொடக்கம் இருந்து வருகின்றது. இதை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு செயற்பட ஆரம்பித்துள்ளது. அதற்காகவே கிழக்கின் தொல்பொருள் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் படை அதிகாரிகளையும் பௌத்த பிக்குகளையும் மட்டும் கொண்ட விசேட ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி அண்மையில் நிறுவியிருந்தார். இந்நிலையில், கிழக்கைப் போன்று வடக்கிலும் விசேட ஜனாதிபதி செயலணியை நிறுவ வேண்டும் என்று சிங்களக் கடும்போக்காளர்கள் கூக்குரல் இடுகின்றனர். சிங்களப் பேரினவாதத்தின் இந்தத் தன்னிச்சையான முடிவுகளை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். தமிழர் தாயகத்தை பௌத்த சிங்கள தேசமாக மாற்ற நாம் ஒருபோதும் அனுமதியோம் - என்றார். (எ-22)

## மூளாயில்...

னரால் சுற்றிவளைக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் உட்படப் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்படும் ஒருவரை இலக்குவைத்தே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்று படையினர் தெரிவித்தனர்.

அதிகாலை முதல் முற்பகல் 10 மணி வரை தேடுதல் நடத்தப்பட்டது. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர், பொலிஸார் பங்குகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-121)

## தேர்தல்...

தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் முதற் தடவையாக கூடவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் தபால்மூல வாக்களிப்பு இடம்பெறும் திகதி தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது. தேர்தல் ஒத்திகை நிகழ்வுகளின் முன்னேற்றங்கள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது. (ம)

## வடக்கு...

டாச்ஸைச்சேனையில உதவிச் செயலாளராகவும், பின்னர் தலைலம்பிட்டி உதவி அரசாங்க அதிபராகவும் பின்னர் மன்னார் மாவட்டத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

1989 - 1991 காலப் பகுதியில் பிரதி திட்டப்ப ணிப்பாளராக கடமையாற்றிய பின்னர் வடக்கு -கிழக்கு மாகாணத்தில் திட்டமிட லில் பிரதிப் பிரதம செயளாளராகவும், பின்னர் 2001 - 2002 காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் செயளாளராக கடமையாற்றினார்.

இதன்பின்னர் 2001 - 2006 காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராகவும் சேவையாற்றினார்.

வடக்கு மாகாணத்தில் 2007 - 2010 காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக இருந்து உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிதி வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி நியாப், நிகொட், நெக்டப், நேரப் போன்ற திட்டங்களுக்கூடாக நலிவடைந்த எமது வடக்கு சமூகத்தை மீள கட்டியெழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-50)

## குற்றங்களுடன்...

டவர்களில் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களும் உள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுக் குழு ஒன்றினை வழிநடத்தும் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக மருதனார் மடத்தில் இளைஞர் குழு ஒன்று ஒன்றுகூடுவதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அந்தத் தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், மருதனார்மடத்தில் வைத்து இந்த இளைஞர் குழுவை வளைத்துப் பிடித்தனர். அங்கிருந்த 8 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், கைது செய்யப்பட்டவர்களில் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள், வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்போர் உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## கைப்பற்றப்பட்ட...

டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

## கடலட்டை...

அந்தப் பகுதி மீனவர்கள் சங்கங்களின் சமாசத்தால் கவன ஈர்ப்பு போராட்டம் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நேற்றுத் திங்கட்கிழமை நண்பகல் அளவில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தின் முன்றலில் இருந்து ஆரம்பமான கவனவீர்ப்பு பேரணி தாளையடி மருதங்கேணி வீதி வழியாக வந்து பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் பதாகைகளை தாங்கியவாறும், கோசங்களை எழுப்பியவாறு சென்றனர்.

கடல் எமதுவளம், எமது சொத்து அதனை அழிக்கலாமா, எமது வளங்களை சுரண்டி எமது வயிற்றில் அடிக்காதே, கடலட்டை தொழிலால் எமது தொழிலை அழிக்காதே, நீதிமன்ற தடை உத்தரவை உடனடியாக செயல்படுத்து, அத்துமீறிய கடலட்டை தொழில் அனுமதியை ரத்துச் செய், கடலட்டை பிடிப்போர் உடனடியாக வெளியேறு, நிறுத்து நிறுத்து கடலட்டை பிடிக்கும் தொழிலை நிறுத்து ஆகிய சுலோக அட்டைகளை தாங்கிய வாறும் கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பிரதேச செயலகத்தை சென்றடைந்தனர்.

அவர்கள் மருதங்கேணி பிரதேச செயலர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் ஆகியோரிடம் மனுக்களைக் கையளித்தனர்.

இந்தப் பேரணியில் தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்த எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், சட்டத்தரணிகள் சுகாஸ், மணிவண்ணன், காண்டீபன், பிரதேச சபை தவிசாளர் அரியகுமார், பிரதேச சபை உறுப்பினர்களான தியாகலிங்கம், பிரசாந்தன், பிரேமாகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ.5,26,173)

## கொரோனா...

வது:

இலங்கையில் கொரோனா ஏற்பட்ட முதலாவது அலையில் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு அருகில் இருந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர். எனினும் சட்டவிரோதமாக வந்தவர்களை அடையாளம் காணுவது பெரிய சிக்கலாக மாறிவிடும்.

இதுவரையில் கொரோனா வைரஸ் இந்தியாவில் கட்டுப்படுத்தவில்லை. இதனால் இந்தியாவில் இருந்து எமது நாட்டுக்குள் சட்டவிரோதமாக வரும் நபர்களை உடனடியாக நிறுத்தவில்லை என்றால் இலங்கை மிகவும் ஆபத்தான நிலைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றார். (ஒ.5)

## கொரோனா 1,905...

ரித்துள்ளது.

அதேவேளை, மேலும் 55 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 342 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்றால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 552 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 46 பேர் மருத்துவமனைகளில் கண்காணிக்கப்படுகின்றனர். (எ-22)

## சிறுமி...

றது.

சிறுமியின் கழுத்துப் பகுதியில் கத்தி பாய்ந்துள்ளது. அங்கிருந்தவர்கள் சிறுமியை மீட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## மைத்திரிக்கு...

கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழக்கும் நிகழ்வு பொலனறுவை பௌத்த மையத்தில் நேற்று நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை முன்னாள் ஜனாதிபதியும், பொதுத்தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மொட்டு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருமான மைத்திரிபால சிறிசேன ஏற்பாடு செய்திருந்தார்.

நேற்று முற்பகல் நிகழ்வு ஆரம்பமானது. மைத்திரிபால சிறிசேனவும் பங்கேற்றிருந்தார். இதன்போது மண்டபத்துக்குள் வந்த தேர்தல் அதிகாரிகள், நிகழ்வு தேர்தல் சட்ட திட்டத்தை மீறும் வகையில் அமைந்துள்ளது, இது தொடர்பில் முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளது எனச் சுட்டிக்காட்டினர்.

அதையடுத்து ஒலிவாங்கியை வாங்கி, இந்நிகழ்வு தேர்தல் விதிமுறைக்கு முரணானது என சிலர் முறையிட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் சட்டத்தை நான் மதிக்கின்றேன். இங்கிருந்து வெளியேறுகின்றேன். ஓகஸ்ட் 5 ஆம் திகதிக்கு பின்னர் சந்திப்போம். அப்போது சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும் - என்றார். (ஒ.5,44)

## ஏ.எல்...

மைப் பரிசில் பரீட்சையை ஒத்திவைப்பதற்கு கல்வி அமைச்சு சமீபத்தில் தீர்மானித்தது.

இதற்கு அமைவாக உயர்தர பரீட்சையை செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்ட்டுள்ளது. இருப்பினும் தொழிற்சங்கம் மற்றும் இதர தரப்பினர் பாடசாலை மற்றும் மேலதிக வகுப்புக்கள் பல மாதங்கள் நிறுத்தப்பட்டு இருந்ததால் பாடத் திட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு போதுமான காலம் இருக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த வருடத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாகவும் இந்த வருடத்தில் கொரோனா காரணமாகவும், பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பாக கருத்து தெரிவித்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படுமானால் ஏனைய பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட வேண்டும். எந்தவொரு மாணவருக்கும் அநீதி ஏற்படாத வகையில் பரீட்சைகள் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையை ஒத்திவைத்தால் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான காலம் தாமதமாகும். தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்துக்கு அமைய செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி உயர்தரப் பரீட்சையை நடத்துவதில் எந்தவித மாற்றமும் இல்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித மேலும் தெரிவித்துள்ளார். (ஒ.5)

## துருப்பிடித்த...

கர் ஆலயக் கிணறு ஒன்றில் இருந்தே இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. தோட்டம் செய்யும் ஒருவர் அந்தக் கிணற்றைத் துப்புரவாக்கியபோது, அதற்குள் துப்பாக்கி இருப்பதை அவதானித்துச் சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்துக்கு சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் சென்ற பொலிஸார் துப்பாக்கியை மீட்டனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-59)

# நாட்டில் காட்டாட்சி தலைதூக்கி விட்டது!

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன் 16**

**நாட்டில் மீண்டும் காட்டாட்சி தலைதூக்க ஆரம்பித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் சட்டத்தின் ஆட்சியைப் பலப்படுத்துவார், அனைவரும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவார், அரசியல் அழுத்தங்களுக்கு இடமளிக்கமாட்டார் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷவுக்கு நாட்டு மக்கள் ஆணை வழங்கினர். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? சட்டத்தின் ஆட்சிக்குப் பதிலாக மீண்டும் காட்டாட்சி தலைதூக்கும் வகையிலேயே சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

மக்களின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதையே கடந்த சில நாள்களில் நடைபெற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டு, அச்சுறுத்தும் செயற்பாடுகளும் ஆரம்பமாகியுள்ளன.

ரத்மலானையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த இடத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. கையில் துப்பாக்கிகள் இருந்தும் பொலிஸ் அதிகாரிகள் பதில் நடவடிக்கையில் இறங்கவில்லை. இதற்கான காரணமும் தெரியவில்லை. அதுமட்டுமல்ல கொழும்பு சுதந்திர சதுக்கத்திலும் நபரொருவர் மர்மமாக உயிரிழந்துள்ளார். அது தற்கொலையா, படுகொலையா என பலகோணங்களில் கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன. உயிரிழந்த நபர் ஊழல் மோசடிகளுக்கு எதிரானவர், அதற்கு எதிராக எழுதியுள்ளார், தகவல்களையும் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் முழுமையான விசாரணை நடைபெறுவதற்கு முன்னரே அது தற்கொலைதான் என காண்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இதற்கு ஒரு சில ஊடகங்களும் துணைநிற்கின்றன. சுதந்திர சதுக்கத்துக்கு அவர் வந்த விதம் உட்பட எதுவும் சிசிரீவி கமராக்களில் பதிவாகவில்லை.

சம்பவம் நடைபெற்றதினம் கமராக்கள் இயங்கவில்லை எனக் கூறப்படுகின்றது. இது எமக்கு பலத்த சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது.

குறிப்பாக நபரொருவர் தற்கொலை செய்துகொள்வதாக இருந்தால் தலையில் சுட்டுக் கொல்வதுதான் வழமை. ஆனால், இவர் வாய்க்குள் துப்பாக்கியைச் செலுத்தி சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இது கொலையா, தற்கொலையா என்பதை ஒரு புறம் வைப்போம். ஆனால், அதிகம் பேசவேண்டாம், கதைத்தால் இதே நிலைதான் என்ற எச்சரிக்கையை இதன்மூலம் விடுப்பதற்கு முயற்சிக்கப் பட்டுள்ளதா என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது. அமெரிக்கச் சம்பவத்துக்கு எதிராக நடைபெற்ற போராட்டமும் ஒடுக்கப்பட்டது. அரச பாதுகாப்பு என்பது ஒடுக்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றது- என்றார்.

(ப-44)

## பெருங்குளம் விநாயகருக்கு திருவிழா நடக்காது

**சாவகச்சேரி, ஜூன் 16**

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோவிலில் இந்தவருடம் பெரும் திருவிழா நடத்துவதில்லை என்றும் கொரோனாதொற்று காரணமாக திருவிழாவை உள்பிரகார விசேட அபிசேகமாக நடத்துவதென்றும் நேற்றுமுன்தினம் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக கோவில் பரிபாலன சபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கோவில் பரிபாலன சபையினர் இதைத் தெரிவித்துள்ள னர்.

விசேட அபிசேகத்தின்போது சுகாதார விதிமுறைகளின்படி கை கழுவுதல், முககவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல் போன்றவை கண்டிப்பாக மேற்கொள்ளப்படுமென்றும் அறிவித்துள்ளனர்.

(த-9)

## இலங்கை அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயார்!

*சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு*

**கொழும்பு, ஜூன் 16**

இலங்கை-சீனா ஆகிய இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதிலும், "ஒரு மண்டலம் ஒரு பாதை' செயற்றிட்டத்தை மேம்படுத்துவதிலும் இலங்கையின் அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக உள்ளோம் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்திருக்கிறது.

சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான 'ஒரு மண்டலம் ஒரு பாதை' திட்டத்தின் கீழ் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான முதலாவது கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சீன கம்யூனிஸ்ட் கட்சியினர் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் 'ஒரு மண்டலம் ஒரு பாதைத் திட்டத்தை வலுப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தல்' என்ற தலைப்பின் கீழ் பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

ஒரு மண்டலம் ஒரு பாதை செயற்றிட்டத்தின் செயற்றிறனை அதிகரிப்பதற்கு இரு நாடுகளினதும் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இந்தக்கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## நீரில் மூழ்கி இருவர் சாவு

**பலாங்கொடை, ஜூன் 16**

கங்கையில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் கல்தொட்ட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளவ கங்கையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்கள் மொரகஹஹேன, மில்லேவ பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 20 மற்றும் 22 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இருவரும், அந்த தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் தமது சக ஊழியரின் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையிலேயே இந்த இடர் இடம்பெற்றுள்ளது.

இருவரினதும் சடலங்கள் பலாங்கொடை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. கல்தொட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஐ)

## கரைதிரும்பாத தமிழக மீனவர்

### இலங்கை கடற்படையிடம் உதவுமாறு கோரிக்கை

இந்தியாவின் தமிழகத்திலிருந்து நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்காக புறப்பட்ட மீனவர்களும், அவர்கள் பயணித்த படகும் கரைதிரும்பாத நிலையில் இலங்கை கடற்படையினரின் உதவி கோரப்பட்டுள்ளது.

தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து 718 இலக்கமுடைய ட்ரோலர் படகில் அக்காமடம், கீழ்க்காடு, ராமநாதபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேர் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றிருந்தனர்.

இவ்வாறு பயணித்த படகு, அதில் இருந்த 4 மீனவர்கள் தொடர்பில் எந்தத் தகவலும் இல்லாத நிலையிலேயே மேற்படி படகு இலங்கைக் கரையை அடைந்ததா என்று இலங்கைக் கடற்படையினரிடம் கோரப்பட்டுள்ளது.

இதேநேரம் இவ்வாறு காணமற்போன படகைத் தேடி இந்திய விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று கச்சதீவை அண்டிய பகுதிவரை தேடுதல் மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-105)


## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 02 . 1930



மறைவு
15 . 06 . 2020

**திருமதி இராஜேஸ்வரி மகாலிங்கம்**

யாழ்ப்பாணம், நல்லூர் முத்திரச்சந்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி மகாலிங்கம் நேற்று (15.06.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்-அம்மாக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசதுரை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், தியாகராஜா, திருஞானசம்பந்தர், பரமேஸ்வரி, ஈஸ்வரி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நேசம்மா, தங்கராணி மற்றும் சிவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கௌசல்யா, வத்சலா, வரதராஜன், றோஜினி, விநாயகராம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவப்பிரியா, வினோதினி, ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஆனந்தன் - 077 670 1597
விஜிதன் - 077 935 2639

தகவல்:
குடும்பத்தினர்.



## சாரதி தேவை

35 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு தங்குமிடம், உணவு வசதி ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். தகுதிக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு
076 737 4444